Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | வைகாசி 25 | புதன்கிழமை (08.06.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 252

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/752)



குண்டர்களைப் பயன்படுத்தும் அரசாங்கம் (03)



மஞ்சுவிடமிருந்து பதக்கம் மெக்கோல்ரிக்கு (06)



தி.மு.க.விற்கு அடுத்த நெருக்கடி மாறன்? (12)



ஜேர்மனியில் தீ (15)

# அதிகாரப் பகிர்வு உயர்மட்டப் பேச்சு

## வார இறுதியில் கொழும்பில் ஆரம்பம்



(கொழும்பு)

அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் அதிகாரங்களை மாகாண மட்டத்திற்குப் பகிர்ந்தளிப்பது தொடர்பான நடைமுறைச் சாத்தியங்கள் குறித்து இந்தியா மற்றும் இலங்கை இராஜதந்திரிகளுக்கு இடையில் மிக முக்கிய உயர் மட்டப் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறவுள்ளது.

வார இறுதியில் கொழும்பில் இடம்பெறவிருக்கும் இந்த பேச்சு வார்த்தைகளில் இந்திய அரசின் சார்பாக இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் மற்றும் வெளியுறவு செயலாளர் நிருபமா ராவ் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

த ஹிந்து பத்திரிகை மேற்படி செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழி வகைகள் குறித்து, அவர்கள் இருவரும் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷ மற்றும் ஐக்கிய நாடுகள்சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனும் வெளியிட்ட கூட்டறிக்கை (15ஆம் பக்கம் பார்க்க)

## களத்தில் 1169 வேட்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 1169 வேட்பாளர்கள் பலப பரீட்சையில் இறங்கியுள்ளனர்.

இத்தேர்தல் மாவட்டத்தில் 19 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 229 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர். சகல முன்னாயத்த நடவடிக்கைகளையும் யாழ்.தெரிவத்தாட்சி அலுவலகம் ஏற்கனவே பூர்த்தி செய்துள்ளது.

## கூட்டமைப்பு கூடுகிறது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை கொழும்பில் கூடுகின்றனர்.

இந்திய பிரதிநிதிகளின் வருகை, அரசாங்கத்துடன் இடம்பெறும் பேச்சுவார்த்தை, தமிழ் தேசிய கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவுசெய்யும் நடவடிக்கை மற்றும் பல விடயங்கள் தொடர்பாக கலந்தாலேசிக்கப்பட உள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தகவலகள் தெரிவிக்கின்றன.

## கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் காயம்

மன்னார் கொண்டச்சி கிராமத்தை அண்மித்த கல்லாற்று காட்டுப் பகுதியில் கரடியொன்றின் தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த கிராமத்தில் மீள்குடியேறியுள்ள 7 பிள்ளைகளின் தநதையான முஹம்மது சாலிஹ முஹம்மது தாலிபு என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காட்டுக்கு சென்று தேன் எடுத்துக் கொண்டிருக்கும்போது அங்கு மறைந்திருந்த குட்டி ஈன்ற கரடி தாக்கிப் காயங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் அமைப்பில் மாற்றம் இந்தியாவுடன் இரகசிய உடன்பாடு

## அடியோடு மறுக்கிறார் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் அமைப்பில் மாற்றம் செய்வது குறித்து அரசு இந்தியாவுடன் இரகசிய உடன்பாடு ஏதாவது செய்யப்பட்டதா என்று ஐக்கிய தேசியக்கட்சி நேற்று நாடாளுமன்றில் சர்ச்சை கிளப்பியுள்ளது.

இந்தியாவுடன் அண்மையில் செய்து கொண்ட உடன்படிக்கை குறித்த விபரங்களை நாடாளுமனறத்தில் அரசாங்கம் வெளியிட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி மேலும் வலியுறுத்தியுள்ளது.

மேற்படி ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கையெழுத்திட்டதாகவும் நாடாளுமன்றத்திற்கு அந்த ஒப்பந்தம் குறித்து அறிவிப்பது அரசாங்கத்தின் கடமை எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

"மனித உரிமை குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தும், தருஸ்மன் அறிக்கை என அரசாங்கம் கூறும் அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையில் அரசாங்கம் எப்படி இந்த விசாரணக்கு இணங்க முடியும்? என்வும் அவர் கேள்வி எழுப்பினர்.

செபா உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கும் அரசாங்கம் இணங்கியுள்ளது எனக் கூறிய அவர், இது குறித்து நாடாளுமன்றத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (15ஆம் பக்கம் பார்க்க)

## இடமாற்றத்திற்கு தற்காலிகத் தடை

அரச சேவையாளர்களை இடமாற்றம் செய்தல், பதவி உயர்வு வழங்குதல் மற்றும் புதிதாக இணைத்துக்கொள்ளல் என்பவற்றை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் தேர்தல்கள் செயலகம் அறிவுறுத்தியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் காலகட்டத்தில் பதவி உயர்வோ, இடமாற்றமோ வழங்கப்படுமாயின் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்குமபடி தேர்தல்கள் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி மகிந்தாவுக்கு ஈ-ரான் ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)


ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹ்மதி நிஜாத் 'ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஊடாக கடிதம் ஒன்றை கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஈரான் ஜனாதிபதியினால் கையளிக்கப்பட்டுள்ள கடிதத்தில் அடங்கியுள்ள விடயங்கள் குறித்து பொதுமக்களுக்கு அறியப்படுத்தப்படமாட்டாது என்று ஈரானிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதிக்கும் ஈரானின் சிரேஸ்ட வெளிவிவகார அமைச்சிற்கும் இடையிலான சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுமத்துவது தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக ஈரான் பிரஸ் டீவி தெரிவித்துள்ளது. ஈரான் பிரதி வெளிவிவகார அமைச்சர் மொஹமட் அலி பதோலாஹிற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கும் இடையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பின்போதே ஈரான் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஈரான் ஜனாதிபதியின் கடிதத்தை கையளித்துள்ளார்.

# அரசாங்க உயர் அதிகாரிகள் அரசின் சொற்படி நடக்கிறார்கள்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வேதனை




மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் ஆலவட்டங்களாக உள்ளமை வேதனைக்குரியது என்று தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் வடக்குக் கிழக்கில் அனைத்து நடவடிக்கைகளும் இராணுவ நிகழ்ச்சி நிரலின் கீழ் நடைபெறுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். வலி.வடக்கில் மீள்குடியமரும மக்களின் தேவை குறித்து கடந்த ஞாயிறன்று கூட்டமைப்பு நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டம் கூட்டப்பட்டதன் காரணம் மீள்குடியேறும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கானது. எனினும் யாழ்.அரச அதிபரோ, தெல்லிப்பளைப் பிரதேச செயலரோ, கிராம உத்தியோகத்தர்களோ இக்கூட்டதிற்கு (15ஆம் பக்கம் பார்க்க)

# தானியங்களால் அபிஷேகம் பூநகரியில் தொடரும் ஐதீகம்



(ஊர்காவற்றுறை)
பூநகரியில் தானியங்களால் ஆலயத்தில் அபிஷேகம் செய்யும் நிகழ்வொன்று நடைபெற்றுள்ளது.

பூநகரி கறுக்காய்த்தீவு, கல்வெட்டுத்திடல் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்திலேயே மேற்படி நிகழ்வு இடம்பெற்றுள்ளது. கடந்த 1980ஆம் ஆண்டின் பின்னர் 20 வருடங்கள் கழித்து அபிஷேக நிகழ்வு நடைபெறுவதாகவும், இத்தானிய அபிஷேகக் குளியல் மூலம் தமது விவசாய வளம் சிறப்புற்று விளங்கும் என்பது அப்பகுதி மக்களின் தொன்றுதொட்டு வரும் ஐதீகமாகக் காணப்படுகின்றது.

இந்த அபிஷேகத்துக்காக தமது நெல் அறுவடைகளின் போது விவசாயிகள் முதல் அறுவடை நெல்லின் ஒரு பகுதியை ஆலயத்துக்காகச் சேமித்து வைத்து உற்சவகாலத்தில் ஆலயத்தில் ஒப்படைத்து தமது நேர்த்தியினை முடிப்பதாகவும் தெரியவருகின்றது. (27)

# பருத்தித்துறைக் கல்விக் கோட்ட சித்திரப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக் கோட்ட மட்டச் சிறுவர் சித்திரப் போட்டி முடிவுகளை வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

**தரம் ஒன்று**

முதலாமிடம் லு.பிரான்சிஸ் ஜெனா, (கலட்டி றோ.க.த.க. பாடசாலை), இரண்டாமிடம் சா.சாருகா (மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம்), மூன்றாமிடம் சி.சாருஜா (துன்னாலை மேற்கு, மெ.மி.த.க. பாடசாலை).

**தரம் இரண்டு**

முதலாமிடம் வி.கிறிஸ்ணமதி (கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை), இரண்டாமிடம் சு.வினுஜா (தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயம்) மூன்றாமிடம் இ.லக்சிகா (துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை).

**தரம் மூன்று**

முதலாமிடம் சு.வனஜா (தம்பசிட்டி மெ.மி.க.பாடசாலை), இரண்டாமிடம் ம.சர்மிக (கற்கோவளம் (மெ.மி.த.க. பாடசாலை), மூன்றாமிடம் ஜோ.அமலறொக்சன் (கலட்டி றோ.க. த.க.பாடசாலை).

**தரம் நான்கு**

முதலாமிடம் ஜெ.சர்மினி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் இ.அபிராமி (துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பாடசாலை). மூன்றாமிடம் ஜெ. சயானந் (தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை.

**தரம் ஐந்து**

முதலாமிடம் லூ.அஜித்குமார், (பொலிகண்டி இ.த.க.பாடசாலை), இரண்டாமிடம் அ.டிலக்ஷனா வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி). மூன்றாமிடம் அ.டிலக்ஷனா வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் பு.அர்சயா மேலைப் புலோலி சைவ பிரகாச வித்தியாசாலை). (109)

# கல்வி நிர்வாக சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை

(பருத்தித்துறை)

இலங்கை அதிபர் சேவை வகுப்பு ஒன்றில் கடமையாற்றுபவர்களுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பில் நடை பெறவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு I இல் கடமையாற்றுபவர்களுக்கு சேவை மூப்பு, திறமை அடிப்படையில் புள்ளி வழங்கப்படுவதுடன், உளச்சார்பு பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இறுதியாக பரீட்சைப் புள்ளியுடன் சேவை மூப்புப் புள்ளியும் சேர்க்கப்பட்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குரிய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

ஒரு வருட சேவைக்கு எட்டுப் புள்ளிகள் வழங்கப்படும். மொத்தமாக சேவைக்கு நூறு புள்ளிகளும், உளச்சார்புப் பரீட்சைக்கு ஐம்பது புள்ளிகளும் வழங்கப்படவுள்ளதென வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## வருடாந்த மஹோற்சவம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நாராந்தனை ஸ்ரீ சிவசுப்பிரமணியம் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் கடந்த 05ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதி புதிய சித்திரத் தேரும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 7.00 மணி முதல் 8.00 மணிவரை செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேல் அவர்களின் சமயச் சொற்பொழிவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறியத்தருகின்றனர். (27)

# நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள சகல வர்த்தக நிறுவனங்களுக்கும் நிறுத்தல் அளவைகள், நிறுக்கும் கருவிகள் முத்திரையிடும் பணி நாளையும் நாளை மறுதினமும் ஊர்காவற்றுறை பிரதேசசபையில் நடைபெறவுள்ளதுடன், எதிர்வரும் 13 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதால் ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களும் குறித்த திகதியில் தமது நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (27)

## உத்தரப் பெருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை அருள்மிகு கணபதீஸ்வரம் சிவன்கோவில் கர வருட ஆனி உத்தரப் பெருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 8ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (27)

# சின்னஞ் சிறு செய்திகள்

## தையல் பயிற்சி

(இணுவில்)

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட யுவதிகளுக்கு ஆறு மாத கால தையல் பயிற்சிநெறி சங்கானை பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் சமூக தொழில்நுட்ப நிறுவனத்தில் (கொம் ரெக்) கடந்த மாதம் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதன் மூலம் இளைஞர் கழங்களின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட யுவதிகள் பயனடையவுள்ளனர். இப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழுடன் இளையோர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக சுய தொழில் கடன்வசதிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (115)

## விசேட கூட்டம்

(கரணவாய்)

யாழ்.மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் கரவெட்டி பிராந்திய கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நெல்லியடி நாவலர் மண்டபத்தில் பிராந்தியத் தலைவர் கோ.குணசிங்கம தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சங்கங்களின் இருந்து இரண்டு பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

## வருடாந்த உற்சவம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை-கரம்பொன் கிழக்கு சாந்தையம்பதி அருள்மிகு ஸ்ரீ காளி அம்பாள் புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 12ஆம் திகதி வரை நடைபெற வுள்ளது. (27)


## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்



SRI NAGAPOOSHANI AMMAN KOVIL

### அறிவித்தல்

### தற்காலிக கடைகள், திருவிழாக்கால உடைதேங்காய் ஏலம்

மேற்படி ஆலய வருடாந்த உயர்திருவிழா 01.07.2011 திகதியன்று ஆரம்பமாகி 16.07.2011 ஆம் திகதி நிறைவு பெறும். இக்காலத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிருவாகத்தினரால் சுட்டிக் காட்டப்படும் இடங்கள் 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

உயர் திருவிழாக் காலத்தில் சேரும் உடை தேங்காய்களுக்கான பகிரங்க ஏலமும் அன்றைய தினத்திலேயே கூறப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகை தந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு :

01. தேநீர் கடை, குளிர்பான நிலையம் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும்.
02. சுகாதாரம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
03. ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் அன்றை தினம் ஏலத் தொகையில் 1 /3 பங்குத் தொகையைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
04. மிகுதித் தொகையினை பத்தாம் (10) திருவிழாவுக்கு இடையில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அன்னையின் சேவையில்

செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(C/763)


# வழிகாட்டும் பலகைகள்

(குருநகர்)

'பெயார்ஸ் காக்கும் கரங்கள்' யாழ்.போதனா வைத்தியசாலையில் நூற்றுக்கணக்கான அறிவிப்புப் பலகைகளைப் பொருத்தி உள்ளது.

வைத்தியசாலையின் சகல சந்து பொந்துகளையும் இலகுவாகக் கண்டறியும் விதமாக அந்த அறிவிப்புப் பலகைகள் திகழ்கின்றன.

ஆய்வுகூடம், நோயாளர் விடுதிகள், சமையலறை, சிற்றுண்டிச்சாலை இவ்விதம் பிரேத அறை வரையான சகல இடங்களையும் சுட்டிக்காட்டும்படியாக ஆங்கிலம், சிங்கம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் அவ்விடங்களை அறிவிக்கும்படியாக அந்தப் பலகைகள் பொருத்தமான இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன. (68)

# 'சுப்றா' போட்டிப் பரீட்சை

(பருத்தித்துறை)

பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான வரையறுக்கப்பட்ட 'சுப்றா' தரத்துக்கான போட்டிப் பரீட்சை இந்த மாதம் 11ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் சனிக்கிழமை 11ஆம் திகதி காலை 9.00-11.00 மணி வரை அலுவலக முகாமைத்துவமும், 11.30 - 13.00 பொது வினாத்தாளும், 14.00 - 16.00 வரை அலுவலக முறைமைகளும்,

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 11.00 மணிவரை தாபன விதிக்கோவையும், 11.30 - 13.30 வரை பொதுநிதி முகாமைத்துவமும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகளைப் பரீட்சைத் திணைக்களம் ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றித் தேசிய ரீதியான போட்டிக்குத் தெரிவாகியவர்களுக்கான பயண ஒழுங்கு பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே தேசிய ரீதியிலான போட்டிகளுக்குத் தகுதிவாய்ந்தவர்கள் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்டக் கூட்டுறவுச்சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (கா)

## மின்சாரத் தடை

உயரழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களிலும்,

நாளை வியாழக்கிழமை அன்று காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

இப்பொழுது எல்லாம் செய்யவேண்டிய கடமையைச் செய்யாமல் பெறவேண்டிய உரிமைகளைப் பற்றி மட்டும் அதிகம் பேசப்படுகிறது. இப்படிப் பேசாமல் அவரது கடமைகளைச் செய்து கொண்டு போனால் சமுதாயத்தில் ஏற்பட்டு வருகிற பூசல்கள் தாமாகவே மறைந்துபோகும்.

-ஸ்ரீ ஜயந்திரர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கனவுகள் இனிப் போதும்!

பட்டு வேட்டி பற்றிய கனவில் இருந்தபோது கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்டது என்று வைரமுத்து எழுதிய கவிதை வரி ஒன்றுண்டு. அதுபோலக் கனவு கண்டுகொண்டிருக்க விரும்புபவர்களாகவே நாமிருக்கிறோம்.

அப்துல் கலாம் சொன்ன "கனவு காணுங்கள்" என்பது வேறு; இடுப்பிலிருப்பது நழுவுவது கூடத் தெரியாத இந்தக் கனவு காணுதல் வேறு.

செய்ய ஒன்றுமில்லை என்ற திகைப்பு அல்லது ஒன்றும் செய்யாமலே எல்லாம் நடந்துவிடாதா என்ற சுருக்கவழி தேடும் சொகுசுத் தனத்திலிருந்தே எமது கனவுகள் கிளைக்கின்றன.

சிங்கள ஆட்சியாளர்கள் நமக்குத் தீர்வு தரவே தரமாட்டார்கள் என்று அடித்துச் சொல்லக்கூடிய ஆய்வாளர்கள் நம்மிடம் எக்கச்சக்கம் பேர் இருக்கிறார்கள். அவர்களிடம், அப்படியானால் நாம் என்னதான் செய்வது என்று கேட்டால், நெற்றியைத் தடவியபடி அடங்கிய குரலில் [தீவிரமான சிந்தனைக்குப் பிறகு பேசுகிறார்கள் என்று அர்த்தம்!] "நம் பிரச்சினை உள்ளுக்குள்ளேயே தீர்க்கக்கூடிய நிலைகளைக் கடந்துவிட்டது. வெளித் தலையீடின்றி இனிச் சரிவராது" என்று ஆய்வை முடிக்கிறார்கள்.

யார் தலையிடுவார்? எப்படித் தலையிடுவார்? இதுவரை கால அனுபவத்தில் நடந்தவை என்ன? என்பதற்கெல்லாம் அவர்களிடம் தெளிவான பதிலை எதிர்பார்க்கக்கூடாது. சிங்கள சமூகம் எதுவும் தரவே மாட்டாது என்று சுருக்குப் பையை இறுக முடிந்துவிட்டால், மிச்சமிருப்பது வெளியார் கனவு மட்டும்தான்.

இனி, தமிழகத்திலிருந்து நெடுமாறன் கூட நாலைந்து தோணிகளில் கடல் கடந்துவந்து சிங்களரை மிரட்டிப் பணிய வைத்துவிடலாம் என்று நம்புமளவுக்கு கனவில் இறங்கிவிடுவோம். சீமானின் ஆவேசம், அமெரிக்காவின் கப்பல், ஐ.நா.வின் விசாரணை, நோர்வேயின் அக்கறை, நாடு கடந்த அரசாங்க அமைச்சர்களின் தீவிரம் என்று எதை வேண்டுமானாலும் நம்பிக் கனவு காண நாங்கள் ரெடி!

கருணாநிதிதான் மத்திய அரசுக்கு சும்மா கடிதங்கள் எழுதி ஏமாற்றிக் கொண்டிருப்பார்; ஜெயலலிதா வந்தால் மகிந்தவைச் சர்வதேசச் சிறைக்கு அனுப்பித் தமிழீழத்தைப் பிரித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார் என்ற மிகச் சுருக்க வழிக் கனவு ஒன்றும் நமக்கிருந்தது.

அவர் பதவிக்கு வந்துவிட்டார்; நாம்தான் படுக்கையிலிருந்து விழுந்து விட்டோம்!

தமிழக முதலமைச்சருடன் நல்லுறவை உருவாக்கி அவரை மென்மைப்படுத்தும்படி புதுடில்லி கொழும்புக்கு சமிக்ஞை அனுப்புகிறது. மிலிந்த மொறகொடவுக்கு நல்ல நண்பர் சந்திரபாபு நாயுடு, அவருக்கு நல்ல நண்பர் ஜெயலலிதா ஜெயராம் என அந்த இணைப்பு பூர்த்தியாகிறது.

இனி நாம் ஜெயலலிதாவை மறந்துவிட்டு கலைஞர் முரசொலியில் தன் உடன்பிறப்புக்களுக்குத் தீட்டப்போகும் "தம்பி எழுந்திடடா, தமிழ் மானம் காத்திடுவோம்!" கடிதத்தைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டும்.

கனவுகளையும், தற்பெருமித மாயைகளையும் களைந்துவிட்டு, சக மனிதர்கள் யாராயினும் நாம் பேசமுடியும், நம் பிரச்சினையைப் புரிய வைக்கமுடியும் என நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். சிரமம் மிகுந்ததாய் இருந்தாலும் செல்லும் திசைவழி அதுவே!

இந்த நாட்டில் இணைந்தொன்றாய் வாழவேண்டிய சமூகங்கள்தான், முதலில் நாம் ஒருவருக்கொருவர் எதிரிகளாக இருக்கப் போவதில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

- ஆசிரியர் -

# பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சருடன் அமைச்சர் பீரிஸ் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சிங்கப்பூருக்கு அரசு முறை பயணத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் ஏனைய பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில் நடைபெற்ற 10 ஆவது ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டே வெளிவிவகார அமைச்சர் அங்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்த மாநாட்டில் 'ஆயுத பாதுகாப்பு சவால்கள்' எனும் தலைப்பில் அமைச்சர் பீரிஸ் உரையாற்றியிருந்தார்.

பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சருடனான இந்தச் சந்திப்பின்போது கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் டி டபிள்யூ ஏ. எஸ். திசநாயக்கவும கலந்து கொண்டார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் ரஷ்யாவின் பிரதி பிரதமருடனும் இருதரப்பு பேச்சு நடத்தியுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சகம் அறிவித்துள்ளது.

## வாதரவத்தை குடியிருப்பாளர்களுக்கு குழாய்மூலம் குடிநீர் விநியோகம்

(கோப்பாய்)

வாதரவத்தை குடியிருப்பாளர்களுக்கு இவ்வளவு காலமும் தேசிய நீர்வடிகால் காலமைப்புச் சபையால் பொதுத் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தன.

தற்பொழுது யுனிசெவ் நிறுவனத்தால் பாரிய பொதுத்தொட்டி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களின் வீடுகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நீரைப்பெறும் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு குறைந்த கட்டணமும், சமுர்த்தி உதவி பெறாத குடும்பங்களுக்கு கூடுதலான கட்டணமும் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (08)

## சிறந்த நூல்களுக்கு பரிசில் வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்டமும், இலங்கை இலக்கியப் பேரவையும் 2008- 2009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவொன்றினை நடாத்தவுள்ளது.

இந்நிகழ்வு, எதிர்வரும் 12 ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு, நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியன்) தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை இலக்கியப் பேரவைச் செயலாளர் சி.சிவதாசன் வரவேற்புரையையும், நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் அருட்தந்தை ஐ.டா.டிக்சன் ஆகியோர் ஆசியுரைகளையும், பேராசிரியர் அ.சண்முகதாஸ் வாழ்த் துரையையும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, மூதறிஞர், கவிஞர் ஐயாத்துரை விருதுரையையும் வழங்க்வுள்ளனர்.

தொடர்ந்து சிறந்த நாவல், சிறுகதை, கவிதை, காவியம், சிறுவர இலக்கியம், நாடகம், சமயம், பலதுறை மொழிபெயர்ப்பு நூல்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

# எதிர்க்கட்சியினரை அடக்குவதற்கு குண்டர்களைப் பயன்படுத்தும் அரசாங்கம்

### என்கிறார் கரு ஜயசூரிய


(கொழும்பு)

எதிர்க்கட்சியினரை அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் குண்டர் குழுக்களை பயன்படுத்திக் கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளினால் நடத்தப்பட்ட பல ஆர்ப்பாட்டங்களைக் கலைப்பதற்கு அரசாங்கம் குண்டர் குழுக்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான அல்லது மாற்றுக் கொள்கைகளுடையவர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது குண்டர்கள் தாக்குதல் நடத்தியமையை அம்பலப்படுத்தும் வகையில் ஊடகங்கள் தகவல் வெளியிட்டுந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த குண்டர் கூட்டத்திற்கும் ஆளும் கட்சி அமைச்சர் ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.



சுதந்திர தின மன்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதும் இவ்வாறான தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் அனுமதியின்றி இவ்வாறான குண்டர்களினால் சுதந்திரமாக சஞ்சரிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் மாற்றுக் கருத்துக்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களையும் அரசாங்கம் முடக்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# மனித உரிமைகள் பயிற்சிநெறியை முடித்த முப்பது பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன

(வவுனியா)

மனித உரிமைகள் பாதுகாவலர் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த 30 பேருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் இறம்பைக்குளம் அருந்ததி மண்டபத்தில் நடைபெற்றது.

மனித உரிமைகளுக்காக ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு இந்தப் பயிற்சிக்குத் தெரிவான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் என் திருஞானசம்பந்தர், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்தானிகர், காரியாலய வவுனியா பிரதிநிதி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு அறிவுகள் மக்கள் மத்தியில் குறைவாகவே உள்ளது. மக்களுக்கு உதவிகளையும், அறிவுரைகளையும் வழங்கும் நோக்குடன் கிராமிய மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு குறித்த பயிற்சிநெறி ஆறு மாதகாலத்திற்கு வழங்கப்படுகின்றது என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (39)

## மஹா கும்பாபிஷேகம்


(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான ராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேச கிரியைகள் ஸ்ரீ விஷ்ணு க.ச.சோமஸ்கந்தாச்சாரியார் தலைமையிலான குருமார்களால் நடத்தி வைக்கப்படும்.

20 ஆம் திகதி முதல் 21 மாலை வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாற்றி வழிபடலாம். (கா)

# கிளிநொச்சி மாவட்ட புழுதிப் பிரயாணத்திற்கு விரைவில் முடிவு கட்டப்படுமென உறுதியளிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதிருந்த வீதிகள் அனைத்தும் விரைவில் புனரமைக்கப்பட்டு மக்களின் இலகுவான போக்குவரத்துக்கு ஏற்றவகையில் தற்போதைய புழுதிப்போக்குவரத்துக்கு முடிவு காணப்படும் என்று ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சிநகரை அண்டிய பகுதியில் உள்ள மூன்று வீதிகளின் புனரமைப்புப்பணிகளை, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியுடன் இணைந்து ஆரம்பித்துவைத்துப்பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைக்கப்படாத 88 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. முதலில் புழுதி கிளப்பும் வீதிகளுக்கு முடிவு கட்டச்செய்தபின் நிரந்தரவீதிகளின் புனரமைப்புப்பணிகள் அடுத்தடுத்த மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

திருநகர் பிரதான வீதி, கணேசபுரம் பிரதான வீதி, மத்திய கல்லூரி வீதி என்பனவற்றின் புனரமைப்புப் பணிகளே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வடமாகாண உள்ளூராட்சி கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், கரைச்சி பிரதேச சபை செயலாளர் தவசோதி, ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (29)

# ஊரியானில் கட்டாக்காலிகள்; கட்டுப்படுத்துவது எப்போது?

(முரசுமோட்டை)

கிளிநொச்சி- ஊரியான் கமக்கார அமைப்பு கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் இம்முறை சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இப்பயிரை கட்டாக்காலி கால்நடைகளை அழித்து வருவதாகவும் இதனால் தாம் நஷ்டத்துக்கு ஆளாகியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கமக்கார அமைப்புக்களுக்கு பலமுறை தெரியப்படுத்தியும் அதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விவசாய செய்கையைப் பாதிக்காத வகையில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு கமக்கார அமைப்புக்களுக்கே உள்ளது. (110)

## இறுவட்டு வெளியீடு

(கோப்பாய்)

கோண்டாவில் இராமகிரு ஷ்ண மகாவித்தியாலயத்தில் இறுவட்டு வெளியீடு இன்று புதன்கிழமை காலை 8 மணி க்கு இராம கிருஷ்ண மகாவித்தி யாலய அதிபர் ச.வாமதேவன் தலைமையில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானமும் கலந்துகொண்டு சிறப் பிக்கவுள்ளார். வெளியீட்டுரையை திருமதி எஸ்.வரதனும், சிறப்புரையை திருமதி மா.வசந்தகுமாரியும் வழங்கவுள்ளனர். (08)

# கண்டாவளையில் அரச சேவை மக்களுக்கு எட்டுவதில் சிரமம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி-கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவையாளர்களுக்குப் பற்றாக் குறை நிலவுவதால், அவசர தேவைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகத் தெரி விக்கப் படுகிறது.

குறித்த பிரதேச செயலர் பிரிவில்16 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளபோதிலும், 7 பிரிவுகளில் மட்டும் கிராம சேவையாளர்கள் கடமையாற்றுவதாகவும், ஏனைய பிரிவுகள் வெற்றிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், வெற்றிடமாகவுள்ள ஏனைய 9 கிராம சேவையாளர் பிரிவில் கிராம அலுவலர் நிரந்தரமாக இல்லாததால் மக்கள் தங்களுடைய தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வெற்றிடமாகவுள்ள பிரிவுகளுக்குப் பதில் கிராம அலுவலர்களை நியமிக்கும் போது அவர்கள் தமது பிரிவுக் கடமையுடன் பதில் கடமையைச் செய்வதில் கஷ்ட நிலையை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இவ்வெற்றிடமாகவுள்ள கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நிரந்தரமாக கிராமஅலுவலரை நியமித்தால் அத்தியாவசிய சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (110)

# பஸ் சேவை இடை நிறுத்தத்தால் 7 கிலோ மீற்றர் நடக்கும் மக்கள்

(கோப்பாய்)

புத்தூர்- வாதரவத்தை வீதியூடான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவை கடந்த பல மாதங்களாக சேவையில் ஈடுபடாததால் அப் பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இப்பகுதிகளில் உள்ள மக்கள் யாழ்ப்பாணம் மற்றும் பிற இடங்களுக்கு பிரயாணம் மேற் கொள்ள வேண்டுமானால் 7கிலோ மீற்றர் தூரம் புத்தூர் சந்திக்கு நடந்து வந்துதான் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அப்பகுதியிலுள்ள மக்களில் பெருமளவானோர் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளதனால் பிரயாணங்கள் மேற்கொள்வதில் பெரும்கஷ்டங் களை எதிர்நோக்கி தமது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

இப்பகுதியிலுள்ள அரச உத்தியோகத்தர்கள், பிற இடங்களில் கல்வி பயிலும் மாணவர்கள், தொழிலுக்காகச் செல்வோர், வைத்தியசாலைகளுக்குச் செல்லும் நோயாளர்கள் போன்றோரும் பெரும்கஷ்டங்களை எதிர்நோக்குவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இக் கஷ்டங்களை நீக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதியூடான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையை நடத்துவதற்கு ஒழுங்கு செய்யவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (08)

# மண்டைதீவு மகாவித்தியாலயத்துக்கு 15இலட்சம் ரூபா செலவில் புதிய மண்டபம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மகாவித்தியாலயத்திற்கு வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த வருடம் 15 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி 60 அடி நீளம் மற்றும் 25 அடி அகலமான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுவருவதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான கூடத்தை அடுத்துள்ள பகுதியில் அமைக்கப்பட்டு வரும் இந்த மண்டபம் இரண்டு மாத கால பகுதியில் நிறைவேற்றப் பட இருப்பதாகவும், வசதிக்கும் தேவைக்கும் ஏற்றவிதமாக வகுப்பறைகளாக மாற்றப்படக்கூடியதாக இருக்குமென்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (23)

# மருதங்கேணி வீதியைத் திறந்து பஸ் சேவையை ஏற்படுத்தித் தரவும்

## அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறையிலிருந்து நாகர்கோவில் ஊடாகச் செல்லும் மருதங்கேணி வீதியை எதிவரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து வைக்க உதவுமாறு இப்பகுதி மக்கள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவைக் கோரியுள்ளனர்.

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் பளையூடாக புதுக்காட்டுச் சந்திக்குச் சென்றே மருதங்கேணிப் பாடசாலைகளுக்குப் போகிறார்கள்.போக்குவரத்துச் செலவு அதிகரித்துள்ளமையால் பெரிதும் கஷ்டமடைகிறார்கள். அத்துடன் பிரயாணத்திற்கு அதிக நேரம் செல்வதாகவும் தெரிவிக்கிறார்கள்.

பருத்தித்துறை - நாகர்கோவில் ஊடாக மருதங்கேணிப் பகுதிக்கு பஸ் போக்குவரத்தினை ஏற்படுத்தினால் வட மராட்சி கிழக்குப் பகுதி யிலுள்ள ஆசிரியர் பற்றாக் குறையை இலகுவில் தீர்க்க முடியும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மீளக்குடியேறிய பகுதியில் ஆசிரியர்கள் தங்கக்கூடிய வீட்டு வசதிகள் குறைவாக இருப்பதனால், தினமும் வீட்டிலிருந்து பாடசாலைக்குப் போய்வருவதற்கு வசதியாக இருக்கும் எனவும் அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)





கிளிநொச்சியில் பாழடைந்த கிணறுஒன்றில் இருந்து மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் தொடர்பாக தகவல்தெரிந்தவர்கள் கிளிநொச்சி குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பொலிஸார் மக்களைக்கேட்டுக்கொண்டுள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் யாழ். போதனாவைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (77)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு யாழ். காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் எச்.யு.ரி.சி.எச். நிறுவனத்தின் யாழ். கிளைக்கான வர்த்தக நிலையத்திறப்பு விழா நடைபெறவுள்ளது.

## தொலைபேசி இணைப்பு

அரியாலையில் கனகரத்தினம் வீதி, திருமகள் வீதி, சென்பெனடிற் வீதி, நாவலர் வீதி மற்றும் உள்வீதிகளில் உள்ள வீட்டுப் பாவனையாளர்களுக்கான தரைவழி தொலைபேசி இணைப்புகளை இலகுவாக வழங்குவதற்கான முயற்சியில் யாழ். ரெலிகொம் நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர். (23)

# வடமராட்சி கிழக்கிலுள்ள நான்கு பாடசாலைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இயங்கவுள்ளன

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் இதுவரை திறக்கப்படாமலுள்ள நானகு பாடசாலைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை முதல் மீளவும் சொந்த இடத்தில் திறக்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, முள்ளியான் ஆகிய கிராமசேவகப் பிரிவுகளில் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை முதல் மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது.

கொடிகாமம், இராமாவில் இடைத்தங்கல் முகாம், குடத்தனை பகுதியில் அமைந்த இடைத்தங்கல் முகாம் என்பன மூடப்படவுள்ளன.

இப்பகுதியில் மீளக்குடிய மரும் மக்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், வெற்றிலைக் கேணி றோ.க.த.க. பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை, கேவில் அ.த.க பாடசாலை என்பன உடனடியாக சொந்தக் கட்டடங்களில் இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் ஆயிரத்து ஐந்நூறு மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு சகல வசதிகளையும் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

வடமராட்சி கல்வி வலயத்திற்கு அண்மையில் யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட தளபாடங்களில் ஒருதொகுதி ஏற்கனவே உடுத்துறை மகா வித்தியாலயத்திலும், ஆழியவளை சி.சி.த.க பாடசாலையிலும், மீளக்குடியமரும் நான்கு பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளுக்கான அதிபர்கள் நியமிக்கப்பட்டு, இவ்விரு பாடசாலைகளுடனும் இணைக்கப்பட்டுள்ளார்கள். மேலும் தேவையான ஆசிரியர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கடமைப் பொறுப்புக்களை ஏற்கக்கூடியவாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக மீளக்குடியமரும் மாணவர்களுக்குத் தேவையான இலவச பாடநூல்கள் மருதங்கேணி கோட்ட அலுவலகத்திலிருந்து வழங்கப்படவுள்ளது. அத்துடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் காலை உணவு வழங்கும் நடவடிக்கைகளும் ஒழுங்குபடுத்தப்படவுள்ளன.

இப்பாடசாலைகளுக்குத் தேவையான வகுப்பறைக் கட்டடங்கள், கிணறு, மலசலகூட வசதிகள், குழாய்மூல குடிநீர் வசதி, விஞ்ஞான ஆய்வுகூடம், அதிபர் விடுதி, ஆசிரியர் விடுதி என்பன யுனிசெவ் நிறுவனத்தின் மூலம் விரைவில் செய்து கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இப்பகுதி மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான அனைத்து வேலைகளையும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் மேற்கொண்டு வருகிறார்.

கல்வி தொடர்பான வேலைகளையும் மேற்பார்வையையும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வ.செல்வராசா ஒழுங்கமைத்து வருகிறார்.(109)

# ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

கடந்த யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி நாம் இலங்கையர் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதியான ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை 10.00 மணிமுதல் சுமார் ஒரு மணிநேரம் வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

ஆண், பெண் என சுமார் 100 பேர் இதில் கலந்துகொண்டனர். ஆர்பபாட்டக்காரர்கள் தமது உறவுகளை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடமாகிவிட்டது கடத்தப்பட்டவர்கள் எங்கே, கடத்தப்பட்ட எமது பிள்ளைகளைத் திருப்பித்தா, போனற பதாதைகளை இவர்கள் ஏந்தி நின்றனர். இதில் வயோதிபத் தாயமார்களும் கைக்குழந்தைகளுடன் பெண்களும் காணப்பட்டனர். (39)

# மீள் புனரமைப்பு

(கட்டுவன்)

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவில் உள்ள உள்ளூராட்சித் திணைக்களத்துக்குச் சொந்தமான 5 கட்டடங்கள் 39.60 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

ஜே-225 கொல்லங்கலட்டி கிராம அலுவலர் பிரிவிலுள்ள தெல்லிப்பழை உப அலுவலக கட்டட புனர்நிர்மாண வேலைகளுக்கு 26 மில்லியன் ரூபாவும், ஜே-226 நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கீரிமலை பஸதரிப்பு நிலைய புனர்நிர்மாண வேலைகளுக்கு ஒரு மில்லியன் ரூபாவும், ஜே-228 தெல்லிப்பழை கிராம அலுவலர் பிரிவிலுள்ள தெல்லிப்பழை பஸ்தரிப்பு நிலையத்துக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தெல்லிப்பழை பொது நூலகத்துக்கு 7.35 மில்லியன் ரூபாவும், தெல்லிப்பழை சந்தைக் கட்டடத்துக்கு 5 மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (22)

# உயர்தர வகுப்பிற்கு அனுமதி பெறுவதற்கு அலைந்து திரியும் மண்டைதீவு மாணவர்கள்

(அரியாலை)

பல்வேறு காரணங்களினால் உயர்தர வகுப்பு அனுமதி பெறுவதில் மண்டைதீவு மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். பாடசாலைகளின் அனுமதிக் காலம் முடிவடைந்த நிலையில் இம் மாணவர்கள் பாடசாலைகளுக்கு அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவு பாடசாலையில் கல்வி கற்று சாதாரண தரப் பரீட்சையில் தேறியவர்களும் இவ்வாறு அலைந்து திரிகின்றனர்.

நகரப் பாடசாலைகளில் அனுமதி கிடைக்காத இவர்கள் யாழ் கல்வி வலயத்தைத் தாண்டி வலிகாமம் வடக்கு மற்றும் வலி.மேற்கு வலயப் பாடசாலைகளுக்கும் தமது விண்ணப்பங்களுடனும் பெறுபேறுகளுடனும் அனுமதிக்காகச் சென்று வருகின்றனர்.

மாணவர்களின் வறுமை நிலை, இடப்பெயர்வு, யுத்தத்தால் பெற்றோரின் உயிர் இழபபு போன்ற காரணங்களைக் கவனத்தில் எடுத்து, இராமநாதன் கல்லூரி போன்ற சில தூரப் பாடசாலைகள் அனுமதி வழங்கியுள்ளன.

இருந்தபோதும், போக்கு வரத்து வசதி குறைந்த நிலையில் தினம் தோறும் (போகவர) ஏறக்குறைய 24 • மைல் (38.4 கி.மீ) தூரம் பயணிப்பதும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மீளக்குடியமர்ந்தவர்களால் விடுதியில் தங்கிப் படிப்பதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதேவேளை மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் மீண்டும் உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க மேலதிகாரிகளும் வேலணைக் கல்வித் திணைக்களமும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (23)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(08.06.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

வைகாசி 25 ஆம் நாள்.

இராகுகாலம் 11.52–1.22, சுபநேரம் 4.22 –5.52

நட்சத்திரம் மகம் பி.ப 12.39 வரை

திதி: ஸப்தமி மு.இ. 7.22 வரை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

- **மேடம்:–** திருமணப் பேச்சு, சுபகாரியம், பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை.
- **ரிஷபம்:–** தேக ஆரோக்கியம், பண வரவு, வீட்டில் நிம்மதி, மன மகிழ்ச்சி, விபத்து வரலாம்.
- **மிதுனம் :–** பண வரவு, நண்பர் உதவி, குடும்பத்தில் குதூகலம், உடல் நலமின்மை, வீணான பயம்.
- **கடகம்:–** நண்பர்களால் தொல்லை, பணக் கஷ்டம், குடும்பத்தில் சலனம், அயலவர் பகை, விபத்து வரலாம்.
- **சிம்மம்:–** பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக சுகம், சுபகாரியம், திருமணப் பேச்சு.
- **கன்னி :–** பணக கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், உடல்நலக் குறைவு, விபத்து.
- **துலாம் :–** பணக் கஷ்டம், நண்பர்களால் தொல்லை, மனச் சஞ்சலம், தேக ஆரோக்கியம், வீண் அலைசசல்.
- **விருச்சிகம்–** சுபகாரியம், பணம் வரும், திருமணப் பேச்சு, குடும்பத்தில் மகிழ்ச்சி, விபத்து வரக்கூடும்.
- **தனுசு:–** பணக் கஷ்டம், மனக் கவலை, வீட்டில் குழப்பம், வீண் அலைச்சல், திருடர் பயம்.
- **மகரம்:–** மனச் சஞ்சலம், பண வரவு, நண்பர் வருகை, வீட்டில் நிம்மதியின்மை, உடல்நலக்குறைவு.
- **கும்பம் :–** பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், திருமணச் பேச்சு, சுபகாரியம்.
- **மீனம்:–** நண்பர் வரவு, குடும்பத்தில் சலனம், பணக் கஷ்டம், உடல்நலக் குறைவு, விபத்து வரும் கவனம்.

## தீர்த்தத் திருவிழா

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெற்றது. எதிர்வரும் 13 ஆம் திகதி வைகாசிப் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது. விளக்கு எரிப்பதற்காக தீர்த்தக்கரையிலிருந்து உப்புத் தண்ணீர் எடுத்துவரப்படும் வைபவம் இடம்பெறவுள்ளது. (40)



கோப்பாய் அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலய அலங்கார உற்சவ தினங்களில் தெய்வீகப் பேருரை ஆற்றிய மதுரகவி காரை எம்.பி.அருளானந்தத்திற்கு ஆலய திருச்சபையினால் 'செந்தமிழ் கலைஞானி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. அவருடன் முன்னாள் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும், அவரது துணைவியாரும் காணப்படுகின்றார்கள். (60)

அஞ்சு விரலும் ஒண்டுபோல இருக்கிறேல்லத்தானே, உப்பிடிச் சொன்னாத் திரிபுவாதியளெண்டு சொல்லுறவையும் இருக்கினம்.

நான் சொல்ல வாறது என்னெண்டா, எங்கட ஊர் பிரசேதங்களில இப்பரெண்டு நூற்றாண்டுக்கு முன்னம் நாங்கள் எல்லாம் ஒரேகுலம், கோத்திரமாகத்தான் இருந்திருக்கவேணுமெண்டு நினைக்கிறன்.

என்ரை நினைவுக்கெட்டியவரை எல்லாச் சனமும் சைவத் தமிழராத்தான் இருந்திருப்பினம்.

போத்துக்கீசர், ஒல்லாந்தர், பிரிட்டிஷ்காறர் வந்துதான் கத்தோலிக்கம், கிறிஸ்தவ சபைகளெண்டு எங்களுக்க ஊடுருவின.

எண்டாலும் நாங்கள் ஒரேசனந்தான். நானிங்க சொல்ல வாறது என்னெண்டா நாவலர் இருந்து சைவத்தைக் காத்ததால சைவம் இண்டைக்கும் வாழுது.

இப்ப இருக்கிற நிலையில உந்தச் சைவமும், வேதமும்தான் பெரிய சமயங்கள். அவேன்ர கையில பெரிய பெரிய பாடசாலைகள், கல்லூரிகள் இருக்கு.எண்டாலும் எங்கட அரசாங்கத்தின்ர உதவியிலையும், அரசாங்கம் வகுக்கிற கல்விப் போதகங்களையும்தான் பின்பற்ற வேணும்.


இந்த நிலையில எங்களில இருந்து வேறொரு புதிய சமயம், சபைக்கு போய்விட்ட குடும்பப் பிள்ளைகளை இந்தப் பெரிய சமயப் பாடசாலைகள், கல்லூரியெண்டு இங்கெல்லாம் படிக்கிறதுக்குச் சேர்க்கேல்ல!

இது என்ன செயற்பாடு? அவங்க இந்த நாட்டுப் பிரஜைகளில்லையா? அந்நியரா? ஏனிந்தப் புறக்கணிப்பை இந்து, கத்தோலிக்கப் பாடசாலைகள் கைக்கொள்ளுதுகள்?

அதுபோக இப்ப எந்தப் பள்ளிக்கூடத்தில பிள்ளையளைச் சேர்க்கிறதெண்டாலும் ஆயிரக்கணக்கும் தாண்டி விட்டதாகக் கேள்விப்பட்டன். யாழ்ப்பாணத்தில இருக்கும் பெரிய இந்துக் கல்லூரில இடம்பெயர்ந்து வந்து இடையில சேர்வதற்காகக் கேட்டபோது, ஒரு லட்சம் ரூபா நன்கொடை கேட்டதெண்டு அந்தப் பிள்ளையளின் பெத்ததுகள் சொல்லிச்சுதுகள்.

காசின்ர பெறுமதி குறைஞ்சுதான் போசசுப் பாருங்கோ! அதுக்கு இலவசமாச் சேர்க்கிற இடத்தில இப்பிடியுமா சேர்க்கிறது!

புள்ளேன்ர பெரிய தேப்பன் வெளிநாட்டில இருந்து வந்தவரெண்டாப்போல உப்பிடியும் அள்ளிக் குடுக்கலாமோ! இப்பிடிப் பாருங்கோ எங்கட கல்விப் புலத்திலையும் எத்தினை ஊத்தையள் கிடக்கு?



பரமர் சங்கமம்

# மஞ்சு வன்னியாராட்சியின் பதக்கம் வழுங்கப்பட்டது மெக்கோல்ரிக்கு




2010ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டித் தொடரில் குத்துச் சண்டைப் போட்டியில் இலங்கைக்கு கிடைத்த தங்கப் பதக்கம் பறிமுதல் செய்யப்பட்டு போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற வேல்ஸ் வீரர் மெக்கோல்ரிக்குக்கு வழங்கப்பட்டதாக ஏற்பாட்டுக் குழு இன்று அறிவித்துள்ளது.

இந்தக் குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற இலங்கை வீரர் மஞ்சு வன்னியாரச்சி ஊக்கமருந்து உட்கொண்டது உறுதியானதைத் தொடர்ந்தே மேற்படி தங்கப் பதக்கம் பறிக்கப்பட்டு இரண்டாவது இடத்தை வென்ற மெக் கோல்ரிக்கு வழங்கப்பட்டதாக ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துகளை மஞ்சு பாவித்திருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அந்த தங்கப்பதக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தற்போது தங்கப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்ட வேல்ஸ் நாட்டு வீரர் மெக் கோல்ரிக் 18 வயதையுடைய இளம் குத்துச்சண்டை வீரராவார்.

இதேவேளை மெக் கோல்ரிக்கினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வெள்ளிப் பதக் கம் பொட்ஸ" வானா நாட்டைச் சேர்ந்த வீரர் ட்ரபலோ சியோகோவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவர் மஞ்சு வன்னியாரச்சியுடனான அரையிறுதிப் போட்டியில் பங்குபற்றி தோல்வியடைந்த நிலையில் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒழுக்காற்று நடவடிக்கையை எவரும் தடுக்க முடியாது

(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் விவகாரங்களில் அரசியல் தலையீடு உள்ளது என்றாலும் அப்ரிடி மீதான ஒழுங்கு நடவடிக்கையை யாராலும் தடுக்க முடியாது எனப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அப்ரிடி ஓய்வு பெறுவதாக தன்னிச்சையாக அறிவித்துள்ளார். இது வீரர்களின் நடத்தை மீறிய செயலாகும். இதற்காகவே அவருட னான ஒப்பந்தத்தை கிரிக்கெட் சபை ரத்து செய்துள்ளது என்றும் அது மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இது குறித்து அப்ரிடியின் வழக்கறிஞர் சையத் அலி கபார் கூறுகையில், பாகிஸ் தான் கிரிக்கெட் சபை இதில் சரியான விதியைக் கடைப்பிடிக்க வில்லை. தனி நபருக்கு பாகிஸ் தான் வழங்கியுள்ள உரிமையைப் பாதிப்பதாக உள்ளது என்றார்.



ரோகித் சர்மா

## 4 விக்கெட்டுக்களால் வெற்றி

மேற்கிந்தியத்தீவுகள் அணிக் கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்தியா 4 விக்கெட் வித்தியா சத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய மேற்கிந் தியத்தீவுகள் அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களை எடுத்தது. இதில் சாமுவேல்ஸ் 55 ஓட்டங்களை எடுத்தார்.

பதிலுக்கு ஆடிய இந்திய அணி 44.5 ஓவரில், 6 விக்கெட் டுக்களை இழந்து வெற்றியி லக்கை அடைந்தது. சிகர் தவான் 51 ஓட்டங்களை எடுத் தார். ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்கள் எடுத்த ரோகித் சர்மா ஆட்டநாயகன் விருதைப் பெற்றுக் கொண்டார். இரு அணி களுக்குமான இரண்டாவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## கெய்லுக்கு விருது

**மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் வீரர்கள் சங்கம் கெய்லுக்கு சிறந்த வீரர் விருது வழங்கப் பட்டுள்ளது. டபிள்யு.ஐ.பி.ஏ., ஆண்டு தோறும் கிரிக்கெட்டில் சிறப்பாக செயற்படும் வீரர்களுக்கு விருது வழங்கி சிறப்பித்து வருகிறது. கடந்த ஆண்டு மேற்கிந்தியத்தீவு அணியில் சிறப்பாக செயற் பட்டதற்காக டபிள்யு.ஐ.பி.ஏ. சார்பில் கெய்லுக்கு சிறந்த கிரிக்கெட் வீரர் விருது வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 2009ஆம் ஆண்டுக்கான டெஸ்ட் போட்டிக் கான விருதினை இவர் பெற்றுள்ளார். இந்தியாவில் நடந்த நான்காவது ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணிக்காக விளையாடிய கெய்ல், தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் 12 போட்டிகளில் பங்கேற்று 608 ஓட்டங்களைக் குவித்துள்ளார். சிறந்த ஆட்டத்தை வெளிப படுத்தி வந்த போலார்டு, டுவைன் பிராவோ இருவரும் ஒருநாள் போட்டிகளுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் விரு தினை பெற்றனர். ருவென்டி-20 போட்டியில் சிறந்து விளங் கியதற்காக மேற்கிந்தியத்தீவு அணியின் தலைவர் டரன் சமி, சுலைமான் பென் விருதினை பெற்றனர்.**

## ஐ.சி.சி. தலைவர் தெரிவு முறையில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது

சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் தேர்வு முறையில் மாற்றம் கொண்டுவரப்படும் என்று தெரிகிறது.

பணம் கொழிக்கும் கிரிக்கெட்டை நிர்வகிக்கும் சர்வதேச கிரிக் கெட் சபை தலைவர் பதவிக்கு யாரைத் தேர்வு செய்வது என் பது சுழற்சி முறையில் முடிவு செய்யப்படும்.

2010ஆம் ஆண்டில் ஐ.சி.சி.துணைத் தலைவர் பதவிக்கு அவுஸ்ரேலிய முன்னாள் பிரதமர் ஜான்ஹோவர்ட் தேர்வு செய் யப்பட்டதற்கு பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து துணைத் தலைவராக தேர்வு செய்யப்படும் திட்டம் கைவிடப்பட்டது.

இந்த நிலையில் ஐ.சி.சி. தலைவர் தேர்வு முறையில் மாற்றம் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து சென்னையில் சமீபத்தில் நடந்த ஐ.சி.சி. நிர்வாகக் குழு கூட்டத்தில் விவாதிக் கப்பட்டது.

இந்த நிலையில் ஐ.சி.சி.யின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் ஹாங்காங்கில் இந்த மாத இறுதியில் நடக் கிறது.

இந்த கூட்டத்தில் ஐ.சி.சி. தலைவர் தேர் வில் உள்ள சுழற்சி முறையை ரத்து செய்து விட்டு புதிய முறையை கொண்டு வர முடிவு செய்யப்படும் என்று தகவல்கள் வெளி யாகி உள்ளன.




## விம்பிள்டன் தொடரில் பங்கேற்க ஐரோப்பாவில் தங்கவுள்ள லி.நா

விம்பிள்டனுக்கு சிறப்பாக தயாராகும் நோக்கில் நாடு திரும்பாமல் ஐரோப்பாவில் தங்க முடிவு செய்துள்ளேன். விம்பிள்டன் போட்டியில் நான் சிறப்பாக செயற்படாவிட்டால் நாடு திரும்புகை யில் மக்கள் என்னை மறந்து விடக்கூடும் என்று லீ. நா கூறினார்.

இதேவேளை, பிரெஞ்ச் ஓப்பனில் லீ நா வெற்றி பெற்ற அன்று அவரைப் பற்றி சீனாவில் சுமார் 50 இலட்சம் பேர் இளையத்தளத்தில் கருத்துப் பரிமாற்றம் செய்துள்ளனர். சுமார் 10 இலட்சம் பேர் லீ. நா ரசிகர்களாக தங்கள் பெயரை பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. விம்பிள்டன் டென்னிஸ் போட்டி வருகிற 20ஆம் திகதி தொடங்குகிறது.

## யாழ். மாவட்ட கரப்பந்தாட்டப் போட்டி; சம்பியனானது பல்கலைக்கழக அணி



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட கழகங்களுக்கிடையே நடை பெற்ற ஆண்களுக்கான போட்டி யில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கரப்பந்தாட்ட அணி யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய் யப்பட்டது.


யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் இள வாலை பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாகவுள்ள மைதா னத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்தப் போட்டி நடை பெற்றது. இறுதிப்போட்டியில் சங்கானை யுத் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பல் கலைக்கழக அணியும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை பல்கலைக்கழக அணி 25க்கு 21, 25க்கு 22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. மூன்றாம் மற்றும் நான்காம் சுற்றுக்களை பலத்த எதிர்ப்பின் மத்தியில் யுத் விளையாட்டுக்கழக அணி 25க்கு 22, 25க்கு 23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சமநிலையில் காணப்பட்டது.

ஐந்தாம் சுற்றில் முதல் பாதி ஆட்டத்தில் யுத் விளை யாட்டுக்கழகம் 08க்கு 06 என்ற நிலையில் பக்கம் மாறிய நிலை யில் தொடர்ந்து விளையாடிய பல்கலைக்கழக அணி போட்டி நிறைவில் 16க்கு 14 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற் றது. ஆட்ட நிறைவில் பல் கலைக்கழக அணி 03க்கு 02 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் சங்கானை யுத் அணியை வென்று யாழ். மாவட்ட சம்பி யனாகத் தெரிவு செய்யப் பட்டது.

## அரையிறுதியில் மோகனதாஸ்

மட்டுவில் மோகனதாஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் கரப்பந்தாட்டப் போட்டியிலேயே மோகனதாஸ் அணி அரையிறுதிக் குத் தகுதி பெற்றது. நேற்று முன்தினம் கைதடி மத்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் 'ஏ' அணியும், மட்டுவில் வான்மதி அணியும் மோதிக் கொண்டன. இதில் 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (11)



**நல்லூர் தெற்கு சனசமூக நிலைய 62ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில், வெற்றிபெற்ற வீரர்களுடன் வடமாகாண விளையாட்டுத்திணைக்களப் பணிப்பாளர் சி. அண்ணாத்துரை மற்றும் விருந்தினர்களும் காணப்படுகின்றனர்.**

# இலங்கையிலும் விளையாட்டுத்துறையில் பட்டம்

(கொழும்பு)

கியூபா நாட்டின் ஹவானா விளையாட்டுத் துறைப் பல்கலைக்கழகத்தின் பட்டத்துக்கு இணையான பாடவிதானமும், அதற்கான பட்டமும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. விளையாட்டுத்துறை சார்ந்த கனதியானதொரு கற்பித்தல் செயற்பாடின்மையின் காரணமாக பல்வேறு பின்னடைவுகளும், சிறந்த வீரர்களை உருவாக்குவதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சில் இது தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அதன் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் கியூபாவின் தூதர் நிர்சியா காஸ்ட்ரோ குவேரா இருவரும் இக்கருத்தைத் தெரிவித்தனர்.

இந்த வகையில் கியூபாவிலுள்ள ஹவானாப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி நெறியைப் பின்பற்றும் இலங்கை வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதென்றும், கியூபப் பயிற்சியாளர்கள் இலங்கைக்கு வந்து உள்ளூர் வீரர்களைப் பயிற்றுவிப்பர் என்றும் தெரியவருகின்றது.

இத்தகையதொரு பட்டப்படிப்பு செயற்படுத்தப்படும்போது விளையாட்டுத்துறையில் காணப்படும் பல்வேறு குறைகளைக் களைய முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# புதிய சாதனை நேரத்தை ஜெசிகா எனிஸ் எட்டுவார்

**ஜெசிகா எனிஸ் பல தருணங்களில் புதிய சாதனை நேரங்களை எட்டும் வகையில் வெற்றி ஈட்டியுள்ளார். அவரால் புதிய சாதனை படைக்க முடியும் என முன்னாள் ஒலிம்பிக் சம்பியன் டெனிஸ் லீவிஸ் தெரிவித்தார். லீவிஸின் 11 ஆண்டு பிரிட்டிஷ் சாதனை 6831 புள்ளியாக உள்ளது. இந்த சாதனையை 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் ஜெசிகா எனிஸ் முறியடிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இன்னும் 2 மாதம் வரை பிரிட்டிஷ் ஹெப்தலான் சாதனை என் வசம் இருக்கும் அதன் பின்னர் ஜெசிகா அந்த சாதனைக்கு உரியவராக திகழ்வார் என டெனிஸ் லீவிஸ் தெரிவித்தார். ஜெசிகாவின் ஓடும் வேகம் என்னை கவர்ந்துள்ளது. அவர் புதிய சாதனைகள் படைக்க வேண்டும். ஆச்சரியம் அளிக்கும் வீராங்கனையாகவும் அவர் உள்ளார் என டெனிஸ் தெரிவித்தார். ஜெசிகா எனிஸ் உலகின் முதல்தர வரிசையில் 2 ஆண்டுகள் முறியடிக்கப்படாத சாதனையுடன் உள்ளார்.**

# ஜாவியரை இணைக்க மாட்ரிட் ஆர்வம்

23 வயது மெக்சிகோ வீரர் ஜாவியர் ஹெர்னான்டசை தங்கள் பக்கம் இழுக்க வேண்டும் என்ற தீராத ஆர்வம் ரியல் மாட்ரிட் அணிக்கு உள்ளது. இதுகுறித்து யுனைடெட் அணி தரப்பிலும் பேசப்பட்டது. கோல் மழை பொழியும் ஹெர்னான்டஸ் எங்கள் அணிக்கே உரியவர். அவரை விட்டுத்தர முடியாது என மான்செஸ்டர் யுனைடெட் அணி உறுதியாகத் தெரிவித்துள்ளது. அதுமட்டுமல்ல, ஹெர்னான்டசின் வாராந்த சம்பளமான 25 ஆயிரம் பவுண்ட் தொகையையும் 50 ஆயிரம் பவுண்ட் ஆக உயர்த்த முடிவு செய்துள்ளது. ஓல்டு டிரா போர்டில் மிகக் குறைந்த சம்பளம் பெறும் வீரர்களில் ஒருவராக ஹெர்னான்டஸ் உள்ளார். இந்த நிலையில் ரியல் மாட்ரிட்டின் ஆர்வம் தெரிந்ததும் ஹெர்னான்டஸ் சம்பளத்தை உயர்த்தியுள்ளது.

கான் காகேப் தங்கக்கோப்பை கால்பந்துப் போட்டியில் மெக்சிகோ தனது தொடக்க ஆட்டத்தில் 5 - 0 கோல் கணக்கில் எல்சல்வேடார் அணியை வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் ஹெர்னான்டஸ் 3 கோல் தொடர்ந்து அடித்து ஹட்ரிக் சாதனை படைத்தார். ஹெர்னான்டசின் அதிரடி ஆட்டம் ரியல் மாட்ரிட் அணியின் கவனத்தில் இருந்து அகலவில்லை. மான்செஸ்டர் யுனைடெட் அணியும் அவரை தன் பிடியில் வைத்து இருக்க முயற்சி எடுத்திருக்கிறது.

# இரண்டாவது டெஸ்ட் சமநிலையில் நிறைவு

(லோட்ஸ்)

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில். நிறைவுற்றது.

2 விக்கெட் இழப்புக்கு 149 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்று தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 335 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்திக்கொண்டது.

இதில் குக் 106, பீற்றர்சன் 72, பெல் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹேரத் 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

தொடர்ந்து 343 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவுற்றது. பந்துவீச்சில் டிரம்லட், புரோட், ட்ரோட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

முன்னதாக முதல் இனிங்ஸில் இங்கிலாந்து 486 ஓட்டங்களையும் இலங்கை 479 ஓட்டங்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து தற்போது 1-0 என முன்நிலை வகிக்கிறது.

இதேவேளை இங்கிலாந்து அணிக்கெதிரான இலங்கைக் குழாமில் இடம்பெற்றிருந்த வேகப் பந்து வீச்சாளர் நுவான் பிரதீப் முழங்கால் காயம் காரணமாக நாடு திரும்புகிறார்.



குக்

# சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் நடால், வொஸ்னியாக்கி முதலிடம்

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் முடிவில் உலக டென்னிஸ் வீரர்-வீராங்கனைகளின் தர வரிசைப்பட்டியலை, சர்வதேச டென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது. இதன்படி பிரெஞ்ச் ஓபன் ஒற்றையர் பட்டத்தை வென்ற ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் ஒற்றையர் பிரிவில் முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

செர்பிய வீரர் ஜோகோவிச் 2ஆவது இடத்திலும், இறுதிப் போட்டியில் தோல்வி கண்ட ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) 3ஆவது இடத்திலும், அன்டி முராரே நான்காவது இடத்திலும், றொபின் சோட்லிங் ஐந்தாவது இடத்திலும், டேவிட்பெடரர். ஆறாவது இடத்திலும், தோமஸ்பேடிச் ஏழாவது இடத்திலும், கைல் மொன்பில்ஸ் எட்டாவது இடத்திலும், மட்ரி பிஸ் ஒன்பதாவது இடத்திலும், அன்டி ரொடிக் பத்தாவது இடத்திலுமுள்ளனர்.

இதேவேளை பெண்கள் ஒற்றையர் பிரிவில் பிரெஞ்ச் ஒப்பன் பட்டத்தை வெல்லாவிட்டாலும் கரோலின் வொஸ்னியாக்கி முதலிடத்திலேயே உள்ளார். கிம் கிலிஸ்ரர்ஸ் இரண்டாவது இடத்திலும் , வீர சுவோனரீவா மூன்றாவது இடத்திலும், பிரஞ்ச் கிண்ணத்தை வென்ற சீனாவின், லீ நா நான்காவது இடத்திலும், விக்ரோறியா அசரென்கா ஐந்தாவது இடத்திலும் , மரியா ஷரபோவா ஆறாவது இடத்திலும், பிரான்சிஸ்கா ஸியாவோன் ஏழாவது இடத்திலும் , பெற்றா கிவிட்டோவா எட்டாவது இடத்திலும் , மரின் பார்ரோலி ஒன்பதாவது இடத்திலும் ,சமந்தா ஸ்ரெளசர் பத்தாவது இடத்திலும் உள்ளனர்

இதேவேளை சானியா மிர்சா 72ஆவது இடத்தில் இருந்து 58ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார்.

# வலிகாமம் வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்




(வலிகாமம்)

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

அதன் ஒரு பகுதி கடந்த ஆறாம் திகதி வெளியானது. மிகுதி விபரம் வருமாறு:

200 மீற்றர் ஓட்டம்

எம். கமலினி (வட்டு மத்திய கல்லூரி), எவ். தர்சிகா (இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம்), சி. மேரி ஜோசப்கினி (மாதகல் சென். ஜோசப்)

400 மீற்றர் ஓட்டம் : ஏ. அனற் ஜூலியா (மாதகல் சென். ஜோசப்), எம். கமலினி (வட்டு மத்திய கல்லூரி), ஏ. அன்ரனிற்றா (பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரி)

800 மீற்றர் ஓட்டம்: ஏ. அனற்ஜூலியா (பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), பி. நளாயினி (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

100 மீற்றர் தடை தாண்டல் : ரி. டான்சிகா (மகாஜனாக் கல்லூரி)

400 தடை தாண்டல் : ஏ. அனற் ஜீலியா (பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), ஆர். சுவேதியா (விக்டோறியக் கல்லூரி), எஸ். வாட்சாயினி (இளவாலை மெய்கண்டன் ம.வி.)

உயரம் பாய்தல் : ரி. சுவர்னியா (இளவாலை மெய்கண்டான் ம.வி.), எஸ். விசிந்தினி (ஏழாலை ஸ்ரீ முருகன்)

ஈட்டி எறிதல் : பி. ரஜிதா (விக்கேடாறியாக் கல்லூரி)

19 வயதுப் பெண்கள்

100 மீற்றர் ஓட்டம் : ஆர். லக்சனா (அருணோதயாக் கல்லூரி), ஆர். பிரணவி (விக்டோறியாக் கல்லூரி), எஸ். அன்ரனிக்கா (மாதகல் சென். ஜோசப்)

200 மீற்றர் ஓட்டம் : ஆர். பிரணவி (விக்டோறியாக் கல்லூரி), ஏ. பவித்திரா (அருணோதயாக் கல்லூரி), எஸ். கலையரசி (வயாவிளான் மத்திய ம.வி.)

400 மீற்றர் ஓட்டம் : எஸ். லக்சலா (இராமநாதன் கல்லூரி), எஸ். கலையரசி (வயாவிளான் மத்திய ம.வி.), பி. கலைரூபி (வட்டு இந்துக் கல்லூரி)

800 மீற்றர் ஓட்டம் : எஸ். லக்சலா (இராமநாதன் கல்லூரி), ரி. துலக்சி (அருணோதயக் கல்லூரி), ப. கலைரூபி (வட்டு இந்துக் கல்லூரி)

1500 மீற்றர் ஓட்டம் : எஸ். கஜானி (முல்லை சைவப்பிரகாச வித்தியாலயம்), ரி. துலக்சி (அருணோதயாக் கல்லூரி), எல். கஜந்தினி (இணுவில் மத்திய கல்லூரி)

5000 மீற்றர் ஓட்டம் : கே. கனுஜா (பண்டத்தரிப்பு ஜெசிந்தா வித்தியாலயம்), ரி. துலக்சி (அருணோதயாக் கல்லூரி), எஸ். தாட்சாயினி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

உயரம் பாய்தல் : எம். கமலினி (உடுவில் மகளிர் கல்லூரி), ரி. மரியரோகினி (மானிப்பாய் மெமோறியல்), ஆர். மோகனா (யூனியன் கல்லூரி)

நீளம் பாய்தல் : ஆர். லக்சனா (அருணோதயாக் கல்லூரி), எஸ். ஜெயரஞ்சினி (விக்டோறியக் கல்லூரி), எஸ். கலைவானி (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

தடை தாண்டல் : ஏ. பவித்ரா (அருணோதயாக் கல்லூரி), எல். ஜெயரஞ்சினி (விக்டோறியாக் கல்லூரி), ரி. தமிழினி (நவாலி மத்திய ம.வி.)

தட்டெறிதல் : ஏ. பவித்ரா (அருணோதயாக் கல்லூரி), எல். கிருஷ்ரியா (பண்டத்தரிப்பு ஜெசிந்தா)

குண்டு போடுதல் : எஸ். கீர்த்தனா (யூனியன் கல்லூரி), எஸ் சர்மிளா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), எல். கௌசிகா (நவாலி மத்திய ம.வி.)

தட்டெறிதல் : எல் கீர்த்தனா (யூனியன் கல்லூரி), எல். கௌசிகா (நவாலி மத்திய ம.வி), எம். ஆன்தேவி (யாழ்ப்பாணக் கல் லூரி)

ஈட்டி எறிதல் : எம். டான்சிகா (வட்டு மத்திய கல்லூரி), எம். கமலினி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ். உமைபாலினி (மகாஜனாக் கல்லூரி)

21 வயதுப் பெண்கள்

100 மீற்றர் ஓட்டம் : கே. உஷாயினி (மானிப்பாய் மெமோறியல் கல்லூரி), எவ். அலக்சியா (இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம்), ரி. பிரியதர்சினி (அருணோதயாக் கல்லூரி).

200 மீற்றர் ஓட்டம் : எஸ். தனுஜா (அருணோதயாக் கல்லூரி), கே. உஷாயினி (மானிப்பாய் மெமோறியல்), ஏ. காயத்திரி (இராமநாதன் கல்லூரி)

400 மீற்றர் ஓட்டம் : ரி. ரேவதி (அருணோதயாக் கல்லூரி), எல். பவிதா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), ஜே. டின்சி டயானா (உடுவில் மகளிர் கல்லூரி)

800 மீற்றர் ஓட்டம் : ஆர். காவேரி (அருணோதயாக் கல்லூரி), ஆர். பிரசாந்தி (வட்டு இந்துக் கல்லூரி), எஸ். அனுசியா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

1500 மீற்றர் ஓட்டம் : ஆர். காவேரி (அருணோதயாக் கல்லூரி), எஸ். தர்சினி (மகாஜனாக் கல்லூரி), எஸ். அனுசியா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

5000 மீற்றர் ஓட்டம் : எம். தனுஜா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ரி. ரேவதி (அருணோதயாக் கல்லூரி), கி. கினோபா (இராமநாதன் கல்லூரி).

100 மீற்றர் தடைதாண்டல் : எவ் அலக்சியா (இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம்), எஸ். ஜனனி (அருணோதயாக் கல்லூரி), பி. ஜனனி (உடுவில் இந்துக் கல்லூரி)

400 மீற்றர் தடை தாண்டல் : ஆர். காவேரி (அருணோதயாக் கல்லூரி), எஸ். ஜனனி (அருணோதயாக் கல்லூரி), ஆர். பிரசாந்தி (வட்டு இந்துக் கல்லூரி)

, உயரம் பாய்தல் : எஸ். தனுஜா (அருணோதயாக் கல்லூரி), எம். ரிசானா (உடுவில் மகளிர் கல்லூரி), கே. அஸ்வினி (வளாவிளான் மத்திய ம.வி.)

நீளம் பாய்தல் : எஸ். தனுஷா (அருணோதயாக் கல்லூரி), வி. சர்மிளா (இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம்), கே. உஷாயினி (மானிப்பாய் மெமோறியல்)

தடை தாண்டல் : கே. சயானி (வயாவிளான் மத்திய ம.வி.), ரி. பிரியதர்சினி (அருணோதயாக் கல்லூரி), ஆர். அஜித்தா (மகாஜனாக் கல்லூரி)

தட்டெறிதல் : எஸ். நிஷாந்தி (அருணோதயாக் கல்லூரி), வி. சர்மிளா (இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம்)

குண்டு போடுதல் : ரி. நித்யா (இராதநாதன் கல்லூரி), ப. தமிழரசி (மகாஜனாக் கல்லூரி), கே. சாஜானி (வயாவிளான் மத்திய ம.வி.)

தண்டெறிதல் : கே. சாஜானி (வயாவிளான் மத்திய ம.வி), ஆர். பிரசாந்தி (வட்டு இந்துக் கல்லூரி), ரி. நித்தியா (இராமநாதன் கல்லூரி)

ஈட்டி எறிதல் : ஜே. சோபிகா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), எஸ். கிருஷிகா (மகாஜனாக் கல்லூரி), எஸ். கஸ்தூரி (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

(முற்றும்)

# உள்நாட்டு கல்வித்தரத்தை அதிகரிக்கவே வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி

## என்கிறார் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.



(கொழும்பு)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை இலங்கையில் அமைப்பதற்கு அனுமதிப்பதான நோக்கம்,உள்நாட்டு சுதந்திரக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கேயென உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழான நிகழ்வு கண்டியில் இடம்பெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டாலும், அதன் மூலம் உள்நாட்டுக் கல்விக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும்

## தொழிற்சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இருந்து உடனடியாக இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும் எனத் . தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை அரசு கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கும் திட்டத்தினையும் மீளப்பெற வேண்டும் என சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர் ஒன்றியத் தலைவர் அன்டன் மார்கஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் பின்னர் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவர் போராட்டத்தின் போது இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த இளைஞன் தொடர்பில் அரசு விசாரணைகளை மேற்கொண்டு உரியவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றார்

அத்துடன் குறித்த சங்கம் ரோஷேன் சானக்க உட்பட பாதிப்புக்குள்ளாகியவர்களுக்கு 5 மில்லியன் வரையில் நஷ்டஈடு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

ஊழியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அன்டன் மார்கஸ் தெரிவித்துள்ளார்.

## போர்க்குற்றங்கள் குறித்த கேள்விகளைத் தவிர்க்கவே

# சிங்கப்பூரில் நடந்த ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் பாதுகாப்புச் செயலர் கலந்துகொள்ளவில்லை

(கொழும்பு)

**போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டால் அதற்குப் பதிலளிப்பதற்கு சிக்கல் நிலை ஏற்படலாமென்பதனாலேயே, சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசியபாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வதனை பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தவிர்த்ததுடன், பதிலாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

பத்தாவது ஆசிய பாதுகாப்பு மாநாடு கடந்த 3ஆம் திகதி இரவு ஆரம்பமாகி 5ஆம் திகதி நிறைவடைந்தது.

சிங்கப்பூரின் சங்கிரி-லா விடுதியில் நடைபெற்ற இந்த மாநாட்டை மூலோபாயக் கற்கைகளுக்கான அனைத்துலக நிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

27 நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுக்கு இந்த மாநாட்டில் பங்கேற்பதற்கான அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்தன.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சர்களுக்கான இந்த மாநாட்டில், இலங்யையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தான் பங்கேற்றார்.

இவருடன் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்கவும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இந்த மாநாட்டில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொபேட் கேற், இந்திய பாதுகாப்பு இணை அமைச்சர் பல்லம் ராஜு, பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸ், ஜப்பான், இந்தோனேசியா, கொரியா, அவுஸ்ரேலியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, சிலி, ஜேர்மனி, மியான்மர், மலேசியா, வியட்னாம் ,பிலிப்பைன்ஸ், சீனா உள்ளிட்ட நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

ஆனால் இலங்கையில் இருந்து வெளிவிவகார அமைச்சர் சென்றிருந்தார்.

ஜனாதிபதி இந்த மாநாட்டில் பங்கேற்காது போனாலும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும் அவர் அனுப்பி வைக்கவில்லை.

இலங்கைமீது எழுந்துள்ள போர்க் குற்றச்சாட்டுகளும் மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகளுமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இத்தகைய குற்றச்சாட்டுகள் தொடர்பாக கேள்விகள் எழுப்பப்பட்டால் அதற்குப் பதிலளிப்பதில் பாதுகாப்புச் செயலர் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

எனவே இலங்கை தொடர்பான கேள்விகள் இந்த மாநாட்டில் கிளப்பப்படுவதை தவிர்க்கும் நோக்கிலேயே இலங்கையின் சார்பில் வெளிவிவிகார அமைச்சர் பீரிஸ் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இலங்கை இராணுவம் மீதே அதிக குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதால், வெளிவிவகார அமைச்சருடன் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரியவும் அனுப்பி வைக்கப்படவில்லை.

அவருக்குப் பதிலாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்க அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தலைமைத்துவ பயிற்சியில் நிர்வாண நடனமா? அடியோடு மறுக்கிறது இராணுவத்தரப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போது இராணுவ முகாம்களில் அளிக்கப்பட்டுவரும் தலைமைத்துவப் பயிற்சியின் பின்னர் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வில்,நிர்வாண நடனம் எதுவும் இடம்பெறவில்லையென இராணுவம் தெரிவித்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர ஒன்றியத்தினால் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தக் குற்றச்சாட்டை உயர்கல்வி அமைச்சும் இராணுவமும் நிராகரித்துள்ளது.

மின்னேரியா இராணுவ முகாம் பகுதியில் நடைபெற்ற தலைமைத்துவ பயிற்சியின்போது நிர்வாண நடனம் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எந்தவொரு மாணவ, மாணவியரும் ஒழுக்கயீனமாக நடந்துகொள்ளவில்லை என மின்னேரிய இராணுவ முகாம் பொறுப்பதிகாரி பிரிகேடியர் அசோக அமுனுகம தெரிவித்துள்ளார்.

அழகுக் கலை பயிற்சி நெறி யொன்று நடத்தப்பட்டதாகவும், இதில் பல மாணவியர் பங்கேற்றதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மூன்று மணித்தியாலங்களாக இந்தப் பயிற்சி நடத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தலைநகரின் முன்னணி தனியார் நிறுவனமொன்றினால் இந்த அழகுக் கலை பயிற்சி நெறி நடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. குறித்த முகாமில் மொத்தமாக 625 மாணவியர் பயிற்சி பெற்று வருவதாகவும், இவ்வாறான எந்தவொரு ஒழுக்கக் கேடான செயற்பாடுகளும் இடம்பெறவில்லை எனவும் பிரிகேடியர் அசோக அமுனுகம தெரிவித்துள்ளார்.

# வெள்ள அனர்த்த பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உலகவங்கி மேலும் 38 மில்லியன் நிதியுதவியளிப்பு

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் வகையில் நிதியுதவி அளித்துவரும் உலகவங்கி, அப்பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களைக் கருத்திற்கொண்டு மேலும் 38 மில்லியன் அமெரிக்கடொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் பெய்த பெருமழையினாலும ஏற்பட்டவெள்ளப்பெருக்கினாலும்,அதனாலேற்பட்ட் மண் சரிவினாலும் 16 மாவட்டங்களைச் சேர்ந்த 12 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

கடுமையான வெள்ளப்பெருக்கு காரணமாக, வடக்கு,கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் 3 இலட்சத்து 63 ஆயிரம் மக்கள் 630 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர்.

இதில் கிழக்குமாகாணத்தின் அம்பாறை, திருமலை மாவட்டங்களே அதிகளவில் மக்கள் பாதிக்கப்பட்டனர். சுமார் ஐந்து இலட்சம் பேருக்கு உணவும் மற்றும் போஷாக்கும் தேவைப்பட்டன.

தற்போது மேலதிகமாக வழங்கப்படவுள்ள நிதிமூலம் மக்கள் குடியிருப்புக்களை அமைக்கவும் விவசாய நிலங்களைச் செப்பனிடவும் உதவுமென உலகவங்கி அதிகாரி கூறினார்.


ஆரம்ப கணக்கெடுப்பின்படி கிராமிய கட்டமைப்புகளைச் சீர்படுத்தவும் நீர்ப்பாசனத்திட்டங்களை,கிராமப்புற வீதிகள் திருத்தம், சுத்தமான குடிநீர், மின்சாரம் பாடசாலைகள் புனரமைப்பிற்காக 500 மில்லியன் அமெரிக்கடொலர் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் ஹெக்ரயர் விவசாய நிலங்களை மீளப்பயன்படுத்தவும், 600 கிலோ மீற்றர் வீதியைத் திருத்தவும் பத்தாயிரம் குடும்பங்களிற்கு சுத்தமான குடிநீர் வழங்கவும் ஐம்பதாயிரம் வீடுகளை அமைக்க முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# சுகாதாரத்துறை சார்ந்த கூட்டங்களை ஆடம்பர ஹோட்டல்களில் நடத்தக்கூடாது

## அமைச்சர் மைத்திரிபால பணிப்புரை

(கொழும்பு)



சுகாதாரத்துறை சார்ந்த எந்தவொரு கருத்தரங்கோ, கலந்துரையாடல்களோ பயிற்சிப் பட்டறைகளோ எதிர்வரும் காலத்தில் ஆடம்பர ஹோட்டல்களின் நடாத்தப்படக் கூடாதென சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் காலங்களின் இவ்விடயங்கள் சுகாதாரத்துறை சார்ந்த மண்டபங்களில் மட்டுமே நடைபெறவேண்டும். வெளிநாட்டுப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் வேளைகளில் அனுமதி பெற்று ஆடம்பர ஹோட்டல்களில் நடாத்த முடியும்.

சில சந்தர்ப்பங்களில் சாதாரண கலந்துரையாடல்கள் கூட ஆடம்பர ஹோட்டல்களில் நடாத்தப்பட்டு பொதுமக்களின் பணம் வீணாக்கப்படுகிறது, நடைபெற்றுள்ளது என்று அமைச்சர் மேலும் கூறினார். எதிர்வரும் காலங்களில் இத்தகைய செயற்பாடுகளில் நிதி ஒதுக்கப்பட்ட மாட்டதென்றும் இதுதொடர்பாக எந்தக் கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளக்கூடாதெனவும் அமைச்சர் சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

14. பொலித்தீன் பையொன்றில் 25 கிராம் வீதம் ஒன்றரைக் கிலோக்கிராம் தேயிலையை எத்தனை பொலித்தீன் பைகளில் அடைக்கலாம்?

.............................................................................

15. ஒரு பேனாவின் விலை 12.50 படி, ரவி ரூபா 200 ஐக் கொடுத்து 12 பேனாக்கள் வாங்கினான் எனின், கடைக்காரர் ரவிக்குக் கொடுத்த மிகுதிப் பணம் எவ்வளவு?

.............................................................................

16. ஒரு பாடசாலையில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 3000 ஆகும். அதில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 2/3 பங்காகும். மிகுதி சிங்கள மாணவர்களாகும். பாடசாலையில் கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையையும், சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையையும் தருக.

.............................................................................

17. ஒரு குளிர்பானப் போத்தல் ஒன்றின் விலை ரூபா 18.50 எனின் 12 குளிர்பானப் போத்தல்களின் விலை யாது?

.............................................................................

18. 1463 ரூபாவை 7 பேருக்குச் சமமாகப் பங்கிடும்போது ஒருவர் பெறும் பணம் எவ்வளவு?


.............................................................................

19. விமல் 4 லீற்றர் 850 மில்லி லீற்றர் பெற்றோலையும் கார்த்திக் அதன் 1/2 பங்கு பெற்றோலையும் வாங்கினார். இருவரும் வாங்கிய பெற்றோலின் அளவு யாது?

.............................................................................

20. கூட்டுக. $\frac{1}{3} + \frac{5}{6}$

21. ஒரு பலகையில் இடைத்தூரம் 2 சென்ரிமீற்றர் ஆக இருக்குமாறு ஆணிகள் இறுக்கப்பட்டுள்ளன. ஆணிகளைச் சுற்றி அனுப்பப்படும் றப்பர் பட்டியினால் அமைக்கப்படும் வடிவம் உருவில் காட்டப்பட்டுள்ளது. அவ்வடிவத்தின் பரப்பளவு யாது?



.............................................................................

22. 915 புத்தகங்கள் மூன்று பெட்டிகளில் சம எண்ணிக்கையில் அடுக்கப்பட்டுள்ளன. ஒரு பெட்டியில் இருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

.............................................................................

**23. நான் புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற வேண்டுமெனப் படித்துக் கொண்டிருக்கிறேன். நேற்றுப் பாடசாலைவிட்டு வீட்டிற்கு வந்தபோது எனக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. எனது மாமா வெளிநாட்டில் இருந்து வந்திருந்தார். தொடர்ந்து கதையை எழுவாய், பயனிலை திருத்தமாக அமைத்து நான்கு சொற்களுக்குக் குறையாத 6 வசனங்கள் எழுதுக.**

1.............................................................................

2.............................................................................

3.............................................................................

4.............................................................................

5.............................................................................

6.............................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்விமுரசு

வெளியீடு 17



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01. பின்வரும் விவரணத்தை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

நான் ஒரு மின்னணுச் சாதனம். மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்டவன். நான் நானாக இயங்காது, பிறர் கட்டளைகளுக்கு ஏற்பவே செயற்படுவேன். நான் எவரையும் ஏமாற்றுவதில்லை. ஏளனமாகச் சிரிப்பதில்லை. எனக்குப் பேராசை கிடையாது. எனது பணிகளை நிறைவாகச் செய்வேன். நேரத்தை வீண் விரயமாக்கமாட்டேன். நான் இன்று கல்வி, வணிகம், வங்கி போன்ற பல துறைகளில் முக்கிய பங்காற்றுகின்றேன். நான் உங்களுக்குச் சிறந்த ஆசிரியன். பிறருடைய வேகத்திற்குத் தகுந்தபடி மெதுவாகவும், துரிதமாகவும் கற்றுக் கொள்ள வழிகாட்டுவேன்.

01. பணிகளை நிறைவாகச் செய்வேன் என்ற வாக்கியத்தின் எழுவாய் எது?

.............................................................................

02. இங்கு "விரயமாக்குதல்" என்ற சொல்லின் பொருள் யாது?

.............................................................................

03. "நிறைவு" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.............................................................................

04. "கட்டளை" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

.............................................................................

05. "பங்காற்றுகின்றேன்" என்பதை இறந்தகாலத்தில் எழுதுக.

.............................................................................

06. "ஆசிரியன்" என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக.

.............................................................................

07. தன்மை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

.............................................................................

08. "ஏமாற்றுவதில்லை" என்பதைப் பிரித்து எழுதுக.

.............................................................................

09. "சிரிப்பதில்லை" என்பதன் உடன்பாட்டு வடிவம் யாது?

.............................................................................

10. மின்னணுச் சாதனம் பங்காற்றும் முக்கிய துறையினை எழுதுக.

.............................................................................

**02. பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

01. நாங்கள்.............................................................சென்றோம்.
(சரணலயம், சரணாளயம், சரணாலயம், சரணாழயம்)

02. மக்கள் அக்கிராமத்தை.............................................................கிராமம் என்று அழைத்தனர்.
(பூச்சோலைக், பூஞ்சோலைக், பூஞ்சேலைக், பூஞ்சோளைக்)

**03. பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

01. கைகொடுத்தல் :.............................................................

02. கிணற்றுள் தவளை போல :.............................................................

**04. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

01. புத்தகம் :........................................ 02. பேனை :........................................

03. ஐந்து :........................................ 04. பச்சை :........................................

**05. பின்வரும் தொடர்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. Silence please :........................................ 02. Come in :........................................

03. Thank you :........................................ 04. What is this :........................................

**06. பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தினை சிங்களத்தில் எழுதுக.**

01. அம்மா :........................................ 02. கதிரை :........................................

03. மாம்பழம் :........................................ 04. அதிபர் :........................................

**07. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

01. பாசல :........................................ 02. சுதுபா(ட்)ட :........................................

03. கிரி :........................................ 04. குருத்துமி :........................................

**08. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01. பொருட்களின் அதிர்வினால் உண்டாவது
1. வெப்பம் 2. ஒளி 3. ஒலி 4. மின்

02. பனிக்கட்டி நீராக மாறும்போது நடைபெறுவது
1. ஆவியாதல் 2. கரைதல் 3. ஒடுங்குதல் 4. உறைதல்

03. இரைமீட்கும் விலங்கு எது?
1. கிளி 2. பூனை 3. புலி 4. மாடு

04. பறக்கும் பாலூட்டி எது?
1. வெளவால் 2. கழுகு 3. காகம் 4. பருந்து

05. பக்கவேர்களில் உணவு சேமிக்கும் தாவரம்.
1. கரும்பு 2. கரட் 3. கச்சான் 4. கத்தரி

06. நீரின் மூலம் பரவும் வித்து.
1. முருங்கை 2. தேங்காய் 3. பனை 4. எருக்கலை

07. வெப்பத்தினால் விரிவடையக் கூடியது.
1. இரும்பு 2. இறப்பர் 3. கல் 4. மண்

08. எமது நாட்டின் பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்று
1. கறுவா 2. தேயிலை 3. ஏலம் 4. கராம்பு

09. அண்மையில் நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். தொடரில் கிண்ணத்தை வென்ற அணி எது?
1. சென்னை சூப்பர் கிங்ஸ் 2. டெக்கான் சாஜ்சர் 3. மும்பை-இந்தியன்ஸ் 4. பெங்களூர் றோயல்

10. நிறைபுரத உணவு வகை?
1. பால் 2. கருவாடு 3. பாண் 4. சோறு

**09. பின்வரும் வீதிக்குறிகள் வெளிப்படுத்துவது யாது என்பதனை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை வீதிக்குறிக்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**

01.  :........................................

02.  :........................................

03.  :........................................

04.  :........................................

05.  :........................................

01. வாகனங்கள் நிறுத்துமிடம்
02. சிறுவர்கள் கடக்கும் இடம் முன்னால்
03. பாதசாரிகள் கடக்கும் இடம்
04. ஒலி எழுப்பத்தடை
05. பாதசாரிகள் கடக்குமிடம் முன்னால்
06. பஸ் தரிப்பிடம்



**10. பின்வருவன சரியாயின் "சரி" எனவும், பிழையாயின் "பிழை" எனவும் அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

01. உலகிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது. (........................)

02. உலகில் அதிகமான மக்கள் ஆங்கில மொழியையே பேசுகின்றனர். (........................)

03. ஒன்பதாவது உலகக்கிண்ணக் கிரிக்கெற் போட்டிகள் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளது. (........................)

04. முதலில் காகிதத்தை உபயோகித்தவர்கள் சீனர்கள். (........................)

05. திமிங்கிலத்தின் வாயில் சுவை நரம்புகள் இல்லை. (........................)

**11. பின்வரும் சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

மின்பாரம்தூக்கி, மின்தூக்கி, பாரம்சாம்பி, லூயிபாஸ்டர், குறுக்குத்தையல், சோம்தையல், கிறுக்கல் சித்திரம், கொலாஜ் சித்திரம்.

01. ரேகைகளைப் பயன்படுத்தி எழுந்தமானமாக வரையப்படும் கலைத்துவப் படைப்புக்கள்........................................ எனப்படும்.

02. இரு துணித்துண்டுகளை ஒன்றன்மீது ஒன்று வைத்துத் தைப்பதற்கு எது உதவக் கூடியதும், ஆரம்பத் தையல் முறைகளில் ஒன்றாகக் கருதக்கூடியதுமான தையல்........................................தையல் ஆகும்.

03. உயரமான கட்டடங்களிலுள்ள அறைகளுக்குச் செல்ல........................................உதவும்.

04. பாரமான பொருட்களை உயர்த்துவதற்கு/மேலே கொண்டு செல்வதற்கு/ கிணற்றில் இருந்து நீர் இறைக்க ........................................உதவும்.

05. விசர் நாய்க்கடி தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த........................................ஆவார்

**12. ஒரு பாடசாலையில் 5A, 5B, 5C எனும் மூன்று வகுப்புக்களில் உள்ள எல்லா மாணவர்களும் 2006 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். அதற்கான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி வினவப்பட்டள்ள வினாக்களுக்கு விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

| தரங்கள் | சித்தியடைந்தோர் | | சித்தியடையாதோர் | |
|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| 5A | 13 | 11 | 9 | 15 |
| 5B | 9 | 8 | 10 | 11 |
| 5C | 15 | 7 | 12 | 9 |

01. மிகக் கூடுதலான பிள்ளைகள் இருந்த வகுப்பு யாது?........................................

02. 5 B வகுப்பில் உள்ள மொத்தப் பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?........................................

03. 5 C வகுப்பில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?........................................

04. 2006ஆம் ஆண்டு அந்தப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?........................................

ஒரு பாடசாலையில் 4A, 4B, 4C எனும் வகுப்புக்களில் இருந்த பிள்ளைகளின் எண்ணிக்கைகள் முறையே 45, 34, 38 ஆக இருந்தது. மூன்று வகுப்புக்களிலும் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஒரே சமமாக இருப்பதற்கு

05. 4A வகுப்பில் இருந்து 4B வகுப்புக்கு எத்தனை பிள்ளைகள் செல்ல வேண்டும்?........................................

06. 4A வகுப்பில் இருந்து, 4C வகுப்புக்கு எத்தனை பிள்ளைகள் செல்ல வேண்டும்?........................................

**13. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01. ஒரு வண்டியில் 365 பேர் பிரயாணம் செய்தார்கள். முதலாவது நிலையத்தில் 98 பேர் இறங்க 46 பேர் ஏறினார்கள். இப்போது புகைவண்டியினுள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

........................................

02. ஒரு தோடம்பழத்தின் விலை ரூபா 8.50 எனின், நான்கு தோடம்பழங்களின் விலை யாது?

........................................

விசேட வினாத்தாள் II ☆ தரம் 05 - 2011 ☆ கல்விமுரசு

# பிறந்த வருடத்தில் நடந்தது என்ன?

எல்லோருக்கும் தான் பிறந்த வருடம் தெரியும். ஆனால் அந்நேரத்தில் உலகத்தில் என்ன நடந்தது என்பது பலருக்குத் தெரியாது. இக்கவலையைப் போக்கத் தான் இந்தத் ஆங்கிலத் தளத்தை உருவாக்கியிருக்கிறார்கள்


நாம் பிறந்த வருடம் இவ்வுலகில் என்னனென்ன செய்திகள் பிரபலம், யாருக்கு என்ன விருது கிடைத்தது, என்ன நிகழ்வுகள் நடந்தன, அந்த வருடத்தின் அரிய கண்டு பிடிப்புகள், பல விதமான நிகழ்வுகளை அருமையாகப் பட்டியலிடு கிறார்கள்.

இந்த இணைய தளத்தில் நுழைந்தவுடன் எம்முடைய பிறந்த வருடத்தை பதிவு செய்தால் உடனே வருடங்கள் பின்னோக்கி



நகரும். நாம் பின்னோக்கி நகர்வது போன்ற ஒரு உணர்வு ஏற்படுகிறது. அடுத்து உங்கள் வருடத்திற்கான செய்திகள் அருமையாக ஒன்றன் பின் ஒன்றாக வந்துக் கொண்டிருக்கும். http://whathappenedinmybirthyear.com என்ற இந்தத் தளம் சற்று வித்தியாசமாகவும், பயனுள்ளதாகவும் உள்ளது.

# முன்னோர்களின் வாகனம்



வளர்ந்து வரும் தொழிற்நுட்ப துறையில் பல விதமான வண்ணங்களிலும் வடிவமைப்பிலும் பல விதமான மோட்டார் வாகனங்கள் இருந்தாலும் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தபட்ட மோட்ட வாகனம் எப்படி இருக்கும் என்று பார்ப்பதற்கு பலருக்கு ஆர்வமாக இருக்கும் தற்போது புதுப்புது தொழில் நுட்பங்களுடன் மோட்டார் வாகனங்கள் வந்துகொண்டிருக்கின்றன தற்போது இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ள படங்கள் எங்கள் முன்னோர்கள் பாவித்த மோட்டர் வாகனங்கள் தான் தற்போது இணையத்தளங்களில் இந்த வாகனங்களின் புகைப்படங்கள் வெளியாகி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மனஅமைதிக்கு மாதுளை



அலுவலகத்தில் கடுமையான பணிகள் காரணமாக மன இறுக்கம் ஏற்படுகிறதா? சிவப்பு நிற முத்துக்கள் கொண்ட மாதுளம் பழச்சாறை அருந் தினால் மன இறுக்கம் குறைந்து மன அமைதி ஏற்பட்டு விடும் என்று ஆய் வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

மாதுளம் பழச்சாறு குடிப்பதால் வேகமாகத் துடிக்கும் இதயத்துடிப்பை சரிசெய்து இயல்பு நிலைக்கு கொண்டு வருகிறது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். 500 மி.லீ மாதுளம் சாறு கொண்ட பழரசத்தை குறிப்பிட்ட நபர்களுக்கு தினம் தோறும் இரண்டு வார காலத்திற்கு ஆய்வாளர்கள் அளித்தனர். பழச்சாற்றை குடிப்பதற்கு முன்னரும். குடித்த பின்னரும் நாடித்துடிப்பு கணக்கிடப்பட்டது. மாதுளம் பழச்சாறு குடித்த நபர்கள் உற்சாகத்துடன் ஆர்வமாக பணியாற்றியதை கண்டறிய முடிந்தது. பல மணிநேரம் தொடர்ந்து வேலை செய்த போதும் மன இறுக்க உணர்வுகள் அவர்களுக்கு இல்லை. பிரிட்டனில் பணி சார்ந்த நெருக்கடி காரணமாக பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். மன இறுக்க பிரச்சினையால் கடந்த ஆண்டு ஐந்தில் ஒரு ஊழியர் விடுப்பு எடுத்துச் சென்றுள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

# இப்படியும் இயங்கும்

ஆசிய நாடுகளில் வசிக்கின்ற மக்களில் அதிகமானவர்கள் பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசி நோக்கியா நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டவையாகத்தான் இருக்கின்றது. தொலைபேசி தொழில்நுட்டபத்தில் புதிய புரட்சி ஒன்றை nokia நிறுவனம் ஏற்படுத்தியிருக்கின்றது. உலகில் முதற்தடவையாக Green Phone என்ற தொலைபேசியைத் தயாரித்துள்ளது. Daizi Zheng's என்பவர் இந்த தொலைபேசியைத் உருவாக்கியிருக்கின்றார். தொலைபேசிகளில் இருக்கும் லித்தியம் பற்றெரிக்கு பதிலாக இந்த தொலைபேசியில் Coca cola குளிர் பானத்தின் மூலம் இயங்கும் bio பற்றெரி பொருத்தப் பட்டுள்ளது. மிக விரைவில் இந்த தொலைபேசி சந்தைக்குவரவிருக்கின்றது. மின்சாரம் தடைப்பட்டாலும் அருகில் இருக்கும் கடை ஒன்றில் Coca cola குளிர்பானத்தை வாங்கி அதற்கு சார்ஜ் ஏற்றிக் கொள்ளலாம் சில வேளை நம்மூருக்கும் விரைவில் இந்தத் தொலைபேசி வரலாம்.





# விண்வெளிப் பழம்

ஸ்ட்ரோபெர்ரி பழத்தின் சிறப்பு அதன் சுவைதான். தக்காளி போன்று இனிப்பும், லேசான புளிப்பும் கலந்த வினோத சுவையுடையது. தோற்றத்திலும் கொஞ்சம் கொல்லாம்பழம், கொஞ்சம் அப்பிள் கலந்ததுபோல் இருக்கும். தற்போது ஸ்ட்ராபெர்ரிப் பழத்துக்கு புதிய பெருமை கிடைத்துள்ளது.

விண்வெளி என்பது விசித்திர சூழல் கொண்டது. அங்கு உயிரினங்கள் வசிக்கவோ, தாவரங்கள் செழிக்கவோ வழியில்லை. ஆனால் விண்வெளியில் செயற்கை சூழலில் தாவரங்களை வளர்க்கும் முயற்சியில் விஞ்ஞானம் நீண்டகாலமாக முயன்று வருகின்றது. தக்காளி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, காட்டாமணக்கு என்று பல தாவரங்களை வளர்த்து சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. அதில் தாவரங்களுக்கு நல்ல வளர்ச்சியும், விளைச்சலும் கிடைப்பதுடன் கூடுதல் சுவையும் இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த வரிசையில் ஸ்ட்ரோபெர்ரி பழத்தை விண்வெளியில் வெகுசுலபமாக வளர்க்கலாம் என்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. எளிதான பராமரிப்பு, குறைந்த ஆற்றல் செலவிலேயே ஸ்ட்ரோபெர்ரி செடியை விண்வெளியில் வளர்க்க முடியும். அமெரிக்காவைச் சேர்ந்த பெர்டியு பல்கலைக்கழக ஆய்வாளர் கேரி மிட்செல் பல்வேறு வகை தாவரங்களை ஆய்வுக்கு உட்படுத்தி இதைக் கண்டுபிடித்துள்ளார். ஹசீஸ் கேப்ஹ வகை ஸ்டரோபெர்ரி பழம் விண் வெளியில் வளர்க்க ஏற்றதாக தெரிகிறது. எதிர் காலத்தில் விண் வெளி (உணவுப்) பழ வகை என்றால் அது "ஸ்ட்ரோபெர்ரி"என்ற சிறப்பு கிடைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.



# FOLDER ஐ பாதுகாக்க...

நமது கணினியில் பல கோப்புகளை வைத்திருப்போம் அவற்றில் நமக்கு தேவையான அல்லது முக்கியமான பல கோப்புகள் இருக்கும். நமக்கே தெரியாமல் சிலர் அழிக்கவோ அல்லது நமக்கு தெரியாமல் பிரதி செய்து கொள்ளவோ முடியும். இதை தடுக்க Prevent என்ற இந்த மென்பொருள் பயன்படுகிறது.


இந்த மென்பொருளை நிறுவிய பின் இயக்கினால் ஒரு Window தோன்றும் இதில் Define Hotkey என்பதில் உங்களுக்கு எளிதான அல்லது நினைவு கொள்ளகூடிய வகையில் எதாவது Key தேர்வு செய்து கொள்க. உதாரணமாக Ctrl + B அல்லது Ctrl + C என ஏதாவது தேர்வு செய்து கொள்க.

தேர்வு செய்த பின் Activate என்ற பட்டனை அழுத்துக. பின் ஒரு Window தோன்றும். இதில் OK கொடுத்த பின் நீங்கள் எந்தவொரு கோப்புகளையும் CUT, COPY, PASTE மற்றும் அழிக்கவோ முடியாது. மேலும் கோப்பின் மேல் Right Click செய்து பார்த்தாலும் அனைத்து வசதிகளும் முடக்கப்பட்டிருக்கும். உங்களுக்கு கோப்புகளை அழிக்க வேண்டுமானால் முன்பு தேர்வு செய்த key அழுத்தினால் போதும். அதாவது முன்னர் Ctrl +B கொடுத்திருந்தால் அதை தற்போது அழுத்தினால் மீண்டும் பழைய நிலைக்கு வந்து விடும். தற்போது நீங்கள் எந்தவொரு கோப்புகளையும் CUT, COPY, PASTE மற்றும் அழிக்க முடியும் இதற்கான மென்பொருளைத் தரவிறக்கச் சுட்டி:- http://www.thewindo wsclub.com/prevent-cut-paste-copy-delete-re-naming-of-files-folders என்ற இணையத்தளத்தைப் பயன் படுத்தலாம் .

கணினி மூலை

# ஈழத்தமிழருக்கு சமவுரிமை பெற்றுத்தர பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலு கோரிக்கை



(சென்னை)

இலங்கைவாழ் தமிழர்களுக்கு உரிய அரசியல், சமுதாய அங்கீகாரத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்கள் அரசியலிலும், தொழில், வேலை வாய்ப்புகளிலும் சமுதாயத்திலும் சமவாழ்வுரிமைப் பெறும் வகையில் அங்கு அரசியல் சட்டத் திருத்தத்தை உருவாக்கிட வேண்டும் என்று அந்நாட்டின் ஜனாதிபதி ராஜபக்ஷவை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் மற்றும் இன்னாள் வெளியுறவு அமைச்சர்கள் ஆகியோர் பல்வேறு வாய்ப்புகளில் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்கள்.

அவர்களது வலியுறுத்தலை ஏற்பதாகவும், தமிழர்களுக்கு உரிய அரசியல் அந்தஸ்து அளிக்கப்படும் என்றும் ராஜபக்ஷ அப்போது உறுதியளித்து வந்துள்ளார். அதைத் தொடர்ந்து ஈழத்தமிழர் தலைவர்கள் மற்றும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டி பலசுற்று கருத்தாய்வு செய்த இலங்கை அரசின் நடவடிக்கையால் தமிழர்கள் பிரச்சினை தீரும் என்ற நம்பிக்கை உலகளாவிய தமிழர்கள் மத்தியில் இருந்தது.

அதைப் பொய்யாக்கும் வ்கையில் இலங்கையில் அதிகாரப் பரவல் என்ற அரசியல் மாற்றத்திற்கு இடமில்லை என்ற கருத்தை நேற்றுமுன்தினம் இலங்கை அரசு வட்டாரம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது உலகளாவிய தமிழர்கள் மத்தியில் குறிப்பாக இலங்கை வாழ் தமிழர்கள் உள்ளத்தில் மிகப்பெரும் வேதனைத் தீயை மூட்டும் நிகழ்ச்சியாகும்.

இந்நிலையில் மத்திய அரசு சிறிதும் தாமதிக்காமல் நேரில் தலையிட்டு இலங்கை வாழ் தமிழர்களுக்கு உரிய அரசியல், சமுதாய அங்கீகாரத்தைப் பெற்றுத்தர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# இந்தியச் செய்திகள்

## மிகப்பெரிய நோயான லஞ்சத்தை ஒழிக்க இளைஞர்கள் இயக்கம் தொடக்கம்

### என்கிறார் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம்

(விழுப்புரம்)

நாட்டின் மிகப்பெரிய வியாதியாக உள்ள ஊழலை ஒழிக்க, இளைஞர்கள் இயக்கத்தை தொடக்கியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.



நாட்டின் மிகப் பெரிய வியாதியாக ஊழல் உள்ளது. அதை எப்படி ஒழிப்பது என இளைஞர்கள் கேட்கின்றனர். ஊழலை ஒழிக்க பல சட்டங்கள் உள்ளன. பலர் கைது செய்யப்படுகின்றனர். சிலர் சட்டத்தின் முன்நிறுத்தி தண்டிக்கப்படுகின்றனர். லஞ்சம் வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது.இந்தியாவில் உள்ள 200 மில்லியன் வீடுகளில், 80 மில்லியன் வீடுகளில் உள்ளவர்கள் லஞ்சத்தில் ஈடுபடுவதாக வைத்துக்கொண்டால், எப்படி லஞ்சத்தை ஒழிக்க முடியும் அதைப் பார்த்து வளரும் இளைஞர்கள் மனம் எப்படி இருக்கும். அன்பு, பாசம் என்ற மிகப்பெரிய ஆயுதத்தை இளை ஞர்கள் பெற்றோர் மீது பிரயோகித்தால், அவர்கள் லஞ்சத்தை விட்டு வெளியே வருவர் என்பது என் கருத்து.

ஒவ்வொருவரும் தன் குடும்பத்தில் இந்த மாற்றத்தை கொண்டு வந்தால், நல்ல சமுதாயம் உண்டாகும் நல்ல தலைவர்கள் கிடைப்பர் நாடு ஊழலில் இருந்து விடுபடும். ஆனால் ஒரு தலைவனால், கட்சியால், மீடியாவால், சட்டத்தால் மட்டுமே ஊழலை ஒழிக்க முடியாது. நாடு மாற வேண்டுமெனில் வீடு மாற வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்படுத்த, இளைஞர்கள் இயக்கத்தை தொடக்கியுள்ளேன். எனக்கு வேண்டும் என்ற சுய நல எண்ணம் தான் லஞ்சம் வாங்கத் தூண்டுகிறது. நாம் எண்ணத்தை மாற்றி வீட்டை, குடும்பத்தை தூய்மையாக்கினால் நாடு மாறும். இளைஞர்கள் இதற்குத் தயாரானால் வாருங்கள் வந்து இயக்கத்தை வலுப்படுத்துங்கள். என்னுடைய இணைய தளத்தில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அப்துல் கலாம் தெரிவித்தார்.

## காந்தி நினைவிடமான ராஜ்கோட்டில் சுஷ்மா சுவராஜ் நடனமாடலாமா?

### கேள்வி எழுப்புகின்றது காங்கிரஸ்





ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்த பாபா ராம்தேவ் போராட்டம் பொலிசாரின் அதிரடி நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டது. உண்ணாவிரத பந்தலில் நள்ளிரவில் புகுந்த பொலிசார் தடியடி நடத்தி தொண்டர்களைக் கலைத்ததுடன், பாபா ராம்தேவை டில்லியில் இருந்து வெளியேற்றியது. பொலிசாரின் இந்தச் செயலைக் கண்டித்து டில்லி ராஜ்காட்டில் பாரதீய ஜனதா கட்சியினர் நேற்றுமுன்தினம் சத்தியாகிரகப் போராட்டம் நடத்தினார்கள். இதில் கட்சியின் மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது பாரதீய ஜனதா தலைவர்களில் ஒருவரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சுஷ்மா சுவராஜ், தொண்டர்கள் மற்றும் தலைவர்கள் முன்னிலையில் நடனம் ஆடினார். இதற்குக் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுபற்றி காங்கிரஸ் பொதுச் செயலாளர், ஜனார்த்தன் திவேதி கூறியதாவது:- நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்கும் ‹சுஷ்மாசுவராஜ் காந்தி நினைவிடமான ராஜ்கோட்டில் நடனம் ஆடியது கண்டிககத்தக்கது. சத்யாக்கிரகப் போராட்டத்துக்கு அவர் அளித்துள்ள முக்கியத்துவம் இதுதானா? இப்படித்தான் சத்தியாக்கிரகத்தை வெளிப்படுத்துவதா? அதில் என்ன சந்தோசப்பட இருக்கிறது. அப்படி அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாக இருந்தால் அன்னாஹசாரே அல்லது பாபாராம்தேவ் ஆகியோர் முன்னிலையில் நடனம் ஆடட்டும். காந்தி சமாதியின் புனிதத்தை கெடுக்க வேண்டாம் என்றார்.

# காங்கிரஸ் தலைமையிலான அரசிற்கு ஆதரவளிக்க அ.தி.மு.க. விரும்பியது

## மத்திய சுகாதார அமைச்சர் தகவல்



(புதுடில்லி)

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்னர், காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசிற்கு ஆதரவளிப்பது தொடாபாக அ.தி.மு.க.தனது விருப்பத்தைத் தெரிவித்தது என மத்திய சுகாதார அமைச்ச் குலாம் நபி ஆசாத் தெரிவிததாா.

புதுடில்லியில் நடைபெற்ற செய்தியாளர்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கேற்ற அவர் மேலும் கூறியதாவது-

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு வழக்கு விசாரணை விவகாரத்தால் தி.மு.க.-காங்கிரஸ் இடையேயான உறவில் எந்த மாற்றமும் இல்லை. எங்களது உறவு நன்றாக உள்ளது. கருணாநிதி எங்களுடன் உள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன், காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக அ.தி.மு.க. தனது விருப்பத்தைத் தெரிவித்திருந்தது. ஆனால் அதை நாங்கள் ஏற்கவில்லை. ஏனென்றால் சந்தர்ப்பவாத கூட்டணியை காங்கிரஸ் கட்சி விரும்பவில்லை. ஒரு கட்சி தோல்வியுற்றதால், வெற்றிபெற்ற மற்றொரு கட்சியின் பின்னால் செல்ல முடியாது

மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியின் கைது நடவடிக்கையால், தந்தை என்ற முறையில் கருணாநிதியின் மனது எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கும் என்று புரிகிறது. அவர் மிகுந்த மன வேதனையில் இருக்கிறார். இந்த விடயத்தில் அவரது வருத்தத்தைப் பகிர்ந்துகொள்ள மட்டுமே முடியும்.

உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் படி, சி.பி.ஐ. இந்த வழக்கு விசாரணையை நடத்தி வருவதால் எங்களால் வேறொன்றும் செய்ய இயலாத நிலையில் உள்ளோம்.

மத்திய அரசின் பங்கு இதில் ஏது மில்லை. கொமன்வெல்த் போட்டி முறைகேடு தொடர்பான வழக்கில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சுரேஷ் கல்மாடியும் சிறையில்தான் உள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


### தி.மு.க.விற்கு அடுத்த நெருக்கடி

## மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்படுகிறார் தயாநிதிமாறன்?

(புதுடில்லி)

2ஜி ஊழலில் தொடர்புடையதாகக் குற்றம்சாட்டப்பட்ட தயாநிதி மாறன் அமைச்சரவை மாற்றத்தின்போது மத்திய அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்படுவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் ஏர்செல்-மேக்ஸிஸ் உடன்பாடு தொடர்பாக சி.பி.ஐ.யின் விசாரணைப் பதிவேட்டில் மாறனின் பெயர் இடம் பெறக் கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



தொலைத் தொடர்பு ஊழலில் ஆ.ராசா, கனிமொழிக்குப் பிறகு 3ஆவது தி.மு.க. பிரமுகராக தயாநிதி மாறனின் பெயர் இடம்பெற உள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ஏர்செல் முன்னாள் தலைவர் ஜி.சிவசங்கரனிடம் சி.பி.ஐ.நேற்றுமுன்தினம் விசாரணை நடத்தியது. மலேசியாவைச் சேர்ந்த மேக்ஸிஸ் நிறுவனத்துக்கு ஏர்செல் நிறுவனத்தை விற்க தயாநிதி மாறன் தன்னை வற்புறுத்தியதாக சி.பி.ஐ.யிடம் சிவசங்கரன் கூறியதாகத் தெரிகிறது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுகளை தயாநிதி மாறன் மறுத்துள்ளார். சிவசங்கரன் கோடீஸ்வரர். அவரை யாரும் பலவந்தப்படுத்த முடியாது. என்னுடன் சேர்ந்து வர்த்தகம் செய்யுமாறு யாரையும் நான் வற்புறுத்தவில்லை என தயாநிதி மாறன் தெரிவித்துள்ளார்.

## காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் மீது செருப்பு வீசித்தாக்குவதற்கு முயற்சி

(புதுடில்லி)




புதுடில்லியில் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு ராம்தேவ் குறித்துப் பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜனார்த்தனன் திவேதி மீது செருப்பு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது.

நவ்சஞ்சார் என்ற ராஜஸ்தான் பத்திரிகையைச் சேர்ந்த சுனில குமார் என்பவர் தான் அணிந்திருந்த செருப்பை எடுத்து ஜனார்த்தனன் திவேதியைத் தாக்க வேகமாகப் பாய்ந்தார். உடனே அங்கிருந்த காங்கிரஸ் தொண்டர்கள் சுனில் குமாரை அடித்து இழுத்து சென்றனர். இதையடுத்து டில்லிப் பொலிஸார் அவரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பின்னர் இதுபற்றி காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜனார்த்தனன் திவேதி கூறுகையில், தன் மீது நடத்தப்பட்டது திட்டமிட்ட சதி எனத் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# அரச எதிர்ப்பாளர்களின் தாக்குதலில் சிரியாவில் 120 பொலிஸார் உயிரிழப்பு



சிரியாவின் வடமேற்கு நகரான ஜிஸ்ர் அல். ஷீகேரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் சுமார் 120 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. அங்கு அரச எதிர்ப்பாளர்கள் மற்றும் படையினர் இடையே கடும் மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன. மோதல் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள சிரிய அரசாங்கம், எதிர்க்கட்சிகள் வன்முறை களில் ஈடுபட்டுவருவதாகவும் பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதல் நடாத்திவருவதாகவும் தெரிவித்துள்ளது. மேலும் அரச கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் மீது எதிர்ப்பாளர்கள் தீ வைத்ததாகவும் இத்தகைய தாக்குதல்களைப் பொறுத்துக் கொள்ளப்போவதில்லையெனவும் குறிப்பிட்டுள்ளது. கடந்த வாரத்தில் அரசு படைகள் நடத்திய தாக்குதல்களில் சுமார் 25 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சிரியாவில் இதுவரை இடம்பெற்ற மோதல்களில் சுமார் 1100 பேர் கொல்லப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன.



கியூபா வந்திருந்த சீன துணை அதிபர் ஜீ ஜிங்கை (இடது) அந்நாட்டு அதிபர் ராவூல்காஸ்ரோ தலைநகர் ஹாவான நகரில் உள்ள அதிபர் மாளிகையில் வரவேற்றார்.

# அனுமின் நிலையங்களை மூட ஜேர்மன் அமைச்சரவை அனுமதி

(பேர்லின்)

ஜேர்மனியில் அணுசக்தி நிலையங்களை மூடும் சட்ட மூலத்திற்கு அந்நாட்டு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் ஏற்பட்ட சுனாமியால், புகுஷிமா அணுமின் நிலையம் சேதமடைந்து கதிர்வீச்சு ஏற்பட்டது. இதனால், தங்கள் நாட்டில் உள்ள அணுசக்தி நிலையங்களை மூட, ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கல் முடிவு செய்தார். இதற்கான மசோதாவுக்கு ஜேர்மன் அமைச்சரவை அனுமதி அளித்தது.

ஜேர்மனியில் ஏற்கனவே ஏழு பழமையான அணுமின் நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. சமீபத்தில் ஒரு அணுமின் நிலையம் தொழில்நுட்பக் கோளாறால் மூடப்பட்டது. 2022ஆம் ஆண்டுக்குள் ஒன்பது அணுமின் நிலையங்களையும் மூடி விடுவதற்கான மசோதாவுக்கு அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியதாக, ஜேர்மன் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் நார்பர்ட் ராட்ஜன் தெரிவித்துள்ளார்.

வரும் 2030ஆம் ஆண்டு வரை 17 அணு உலைகள் பயன்பாட்டில் இருக்கும். அணு உலைக்ள் மூடப்படுவதால் ஏற்படும் மின் பற்றாக்குறையைப் போக்க, நிலக்கரி, எரிவாயு மற்றும் சூரியசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும். பணியை அதிகரிக்க ஜேர்மன் அரசு திட்டமிட்டுள்ளது

# அரச கண்காணிப்பிலிருந்து விலக்கு அளிக்குமாறு பாகிஸ்தான் விஞ்ஞானி நீதிமன்றில் மனுத்தாக்கல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் அணு விஞ்ஞானியை பாகிஸ்தான் அரசு காண்காணித்து வருவதிலிருந்து விலக்குஅளிக்கக் கோரி நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் அணு விஞ்ஞானியான அப்துல்காதிர்கான். இவர் அணு ரகசியங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அப்போதைய முஷாரப் ஜனாதிபதி ஆட்சியில் இவர் வீட்டுக்காவலில் இருந்தார். பின்னர் கடந்த 2009 ஆம் ஆண்டு புதிய அரசு இவருக்கு சில நிபந்தனைகள் விதித்து விடுதலை செய்தது. எனினும் இவரது நடவடிக்கைகளை கண்காணித்தது. இந்நிலையில் காதிர் கானின் பாதுகாவலர், முகமது பாஹிம் என்பவர் இஸ்லாமாபாத் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில், அணு விஞ்ஞானி காதிர்கானை பாகிஸ்தான் அரசு கடந்த இரு ஆண்டுகளாக கண்காணித்து வருகிறது லாகூரில் கடந்த சில மாதங் களுக்கு முன்பு கைது செய் யப்பட்ட அமெரிக்க உளவாளி ரேய்மாண்ட் டேவிஸுடன் தொடர்பு உள்ளதாக சந்தேகிக்கிறது. இது இவரது புகழுக்கு களங்கள் விளைவிப்பதாகும். ஆகவே பாகிஸ்தான் அரசு இவரை கண்காணிப்பதை விலக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறியிருந்தார்.

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கர வருட வருடாந்த மஹோற்சவம் - 2011



அலைகடல் சூழ் நடுவே அமைந்திருந்து வேண்டுவார் வேண்டுவதை அருளி அருள் பாலிக்கும் வரலாற்றுப் புகழ்மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவம் இவ்வாண்டு ஆடி மாதம் 01 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து ஆடி மாதம் 16 ஆம் திகதி தெப்போற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

அம்பாளின் ஆலய புகுமுக 108 அடிக் கோபுர வேலைகள் முடிவுறும் நிலையிலுள்ளதுடன், தெற்கு வீதி நுழைவாயில் அலங்காரக் கோபுரம், ஆலய வளாகத்தில் அமைந்துள்ள கேணி, கலையரங்கு என்பன புதுப்பொலிவுற அமைக்கப்பட்டு உற்சவகாலம் முழுவதும் ஆன்மீகச் சொற்பொழிவு, திருமுறை ஓதல், இன்னிசைச் கச்சேரி என்பன இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் யாத்திரீகர்களின் வசதி கருதி இலங்கை போக்குவரத்துச் சபையினர், புங்குடுதீவு தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் போன்றவை மேலதிக பேருந்து சேவைகளை யாழ். குறிகட்டுவான் துறைமுகம் வரை தினமும் நடாத்தவுள்ளதுடன், நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினால் பாதுகாப்பான படகுச் சேவைகளும் தொடர்ந்து இடையூறின்றி நடாத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாத்திரீகர்களின் வசதி கருதி சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள் வழமைபோன்று அமுதசுரபி அன்னதான சபையினரின் அன்னதான ஒழுங்குகளும் சிறப்பாக நடைபெற ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் சைவ கலாசார மரபுகளுக்கிணங்க ஆடைகள் அணிந்து கொள்வதுடன், தங்க ஆபரணங்கள் முதலியன அணிந்து வருவதையும் பாதுகாப்புக் கருதித் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அடியார்களுக்கு உதவ சாரணர் இயக்கத்தினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், மக்கள் நலன்புரிச் சங்கம், ஆலய தொண்டர் சபையினர் தமது சேவைகளையும் வழங்கவுள்ளனர்.

அடியார்களின் தேவை கருதி, ஆலய அறங்காவலர் சபையினர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். எனவே, அம்பிகையின் அடியார்கள் அனைவரும் அலைகடல் என திரண்டு வந்து அம்பிகையின் உயர் திருவிழாவில் கலந்து அன்னையின் தெய்வீக திருவருளைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் அன்பாக வேண்டுகின்றோம்.

## விசேட உயர்திருவிழா விஞ்ஞாபனம்

| | | | | |
|---|---|---|---|---|
| 01.07.2011 | வெள்ளிக்கிழமை | 01ஆம் திருவிழா | பகல் | கொடியேற்றம் (12.00 மணி) |
| 05.07.2011 | செவ்வாய்க்கிழமை | 05ஆம் திருவிழா | இரவு | முத்துச்சப்பறம் |
| 07.07.2011 | வியாழக்கிழமை | 07ஆம் திருவிழா | இரவு | கைலைக் காட்சி |
| 09.07.2011 | சனிக்கிழமை | 09ஆம் திருவிழா | பகல் | எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் |
| 10.07.2011 | ஞாயிற்றுக்கிழமை | 10ஆம் திருவிழா | பகல் | சிவபூசை கைலைக்காட்சி |
| | | 10ஆம் திருவிழா | இரவு | திருமஞ்சம் |
| 11.07.2011 | திங்கட்கிழமை | 11ஆம் திருவிழா | பகல் | விசேட கருட - சர்ப்ப பூஜை, |
| | | வாயு பட்சணி நாகம் | | வீதியுலா (இரவு பூந்தண்டிகை) |
| 13.07.2011 | புதன்கிழமை | 13ஆம் திருவிழா | பகல் | கைலைக்காட்சி, இரவு சப்பறம் |
| 14.07.2011 | வியாழக்கிழமை | 14ஆம் திருவிழா | பகல் | தேர் 09.30 மணி |
| 15.07.2011 | வெள்ளிக்கிழமை | 15ஆம் திருவிழா | காலை | தீர்த்தம் |
| 15.07.2011 | வெள்ளிக்கிழமை | 15ஆம் திருவிழா | இரவு | திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 16.07.2011 | சனிக்கிழமை | 16ஆம் திருவிழா | இரவு | தெப்போற்சவம் (பூங்காவனம்) |

அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்.

(C/762)

# ரஷ்யாவின் மொழித்தினம் யூன் -6 என அறிவிப்பு

(மாஸ்கோ)

ஆண்டு தோறும் ஜூன் 6ஆம் திகதியை ரஷ்ய மொழித் தினமாக, அறிவித்து அந்நாட்டு ஜனாதிபதி டிமெட்ரிமித்வதேவ், புதிய சட்டம் கொண்டு வந்தார். நவீன ரஷ்யாவின் மிகச்சிறந்த இலக்கியவாதியாக திகழ்ந்தவர் அலெக்ஸாண்டர் புஷ்ஹின் (1799-1837). இவர் ரஷ்ய கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார். இவரது பிறந்த நாள் ஆண்டு தோறும் ஜூன் மாதம் 6ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அவரது பிறந்த நாளான நேற்று ரஷ்யாவின் மொழி ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டத்தை அதிபர் டிமெட்ரிமித்வதேவ் கொண்டுவந்தார். ரஷ்யா மொழி வளர்ச்சிக்கும், ரஷ்ய கூட்டமைப்பின் கலாசாரத்திற்கு சர்வேதச தொடர்பு களில் ரஷ்ய மொழியினை புகழடையச் செய்தை இலகுவாக கொண்டு அவரின் பிறந்த நாளன்று அதிபர் இந்தச் சட்டத்தைஇயற்றி அதற்கான ஒப்புதல் அளித்து கையெழுத் திட்டதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவிக்கிறது.

# குற்றச்சாட்டுக்களுக்கு எதிர்வினையாற்றுவதில் படையினர் முக்கிய பங்காற்ற வேண்டும்

ஆயுத மோதல் முடிந்து இரண்டு வருடமான பின்பும், இலங்கை, ஜெனீவாவிலுள்ள மனித உரிமைகள் ஆணையகத்தில் மனித உரிமைகள் ஆணையகம் மற்றொரு இராஜதந்திர வெற்றியை நாடி நிற்கிறது. காரணம்? ஐ.நா. நிபுணர் குழுவின் பரிந்துரைகளுள் ஒன்று, இவ்வறிக்கை வெளிவந்த சூழலில், மனித உரிமைகள் பேரவையை அது 2009மே இல், விசேட அமர்வில், எடுத்த தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்பதாகும்.

மேலும் மனித உரிமைகள் பேரவையின் 17ஆவது அமர்வைத் தொடக்கிவைத்த ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, நிபுணர்குழுவின் புதிய தகவலின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணையகம் தன் பழைய நிலைப்பாட்டைப் பரிசீலிக்க வேண்டும் எனக் கோரியிருக்கிறார்.

2009 மே இல் ஈட்டப்பட்ட இராஜதந்திர வெற்றியின் தாக்கம் பெரிது. இவ் விஷயத்தை மீளப்பரிசீலிக்க முனைந்தால் இலங்கை முந்தியது போன்றதொரு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இலங்கை மீண்டும் வெற்றிபெறுமாயின் சர்வதேசப் பொறுப்புக்கூறப் பொறிமுறையை நிறுவும் முன்னெடுப்புகளைச் செய்யும் நாடுகளுக்கு அது பெரிய அடியாக இருக்கும். மனித உரிமைகள் ஆணையக உறுப்பினர்களான சீன, ரஷ்ய நாடுகளின் ஆதரவுடன் ஈட்டப்படும் வெற்றி, வேறிடங்களில் குறிப்பாக பாதுகாப்புச் சபையில் ஏதும் பாதகமான தீர்மானம் நிறைவேற்றப்படுவதைத் தவிர்க்கும். எனவேதான் ஜெனீவாவில் இலங்கையின் ஆற்றுகை முக்கியமானதாகவும்,தீர்க்கமானதாகவும் அமையப்போகிறது.

17ஆவது அமர்வு இப்பொழுதுதான் தொடங்கியுள்ளது. 'புதுத்தகவலின்' அதாவது நிபுணர்குழு அறிக்கையின் அடிப்படையில் பரிசீலனை செய்யும் அறிகுறிகள் இதுவரை ஏதுமில்லை. (ஆனால் பாரிய அழுத்தம், குறிப்பாக சனல் -4 காட்சிகள் பற்றி ஐ.நா.வின் விசேட தொடர்பாளர் கிறிஸ்தோப்ஹெயின்ஸ் அறிக்கை, பிரயோகிக்கப்படுகிறது)

இலங்கை விவகாரத்தை மீளத்திறக்கும் தீவிர முயற்சிகள் செப்ரெம்பரில் மேற்கொள்ளப்படும் என சில செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எது எப்படியாயினும், இறுதி விளைவை உருவாக்கும் அல்லது வரையறுக்கும் பல காரணிகள் உள்ளன. ஒன்று-ஐரோப்பிய அல்லது மேற்குலக நாடுகளின் மனப்பாங்கும் அணுகுமுறையும். இரண்டு- இலங்கை தன் முந்தைய (அதாவது 2009) ஆதரவுத் தளத்தைத் தக்கவைக்கும் வழிவகை. மூன்று- பொறுப்புக்கூறல் விடயத்திலும் மனித உரிமைகள் மீறல் குறித்த குற்றச்சாட்டுகள் பற்றியும் இலங்கை அடைந்துள்ள அல்லது அடைந்து கொண்டிருப்பது போலத்தென்படும் முன்னேற்றம், (இது முந்திய இரு அம்சங்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.

முதலாவதாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளும் மற்றைய மேற்கத்தைய நாடுகளுமே இலங்கை அரசாங்கத்தையும் அதன் ஆயுதப்படைகளைப் பற்றியும் விமர்சனம செய்பவை. இந்த நாடுகளின் அனுசரணையுடன் முன்மொழியப்பட்ட பிரேரணைதான் மனித உரிமைகள் ஆணையகத்தில் 2009 மே இல் தோற்கடிக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளின் மனப்பாங்கில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை. இங்கு ஒரு விஷயம் வலியுறுத்தப்படவேண்டும். இலங்கை நிலைவரம் பற்றி ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் மே 12 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கைக்கு 'ஒரு வெற்றி' எனத் தவறாகப் புரிந்து கொள்ளப்படலாம்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் மே 12 தீர்மானம் இலங்கை பற்றிய 'உடனடியாக ஒரு சர்வதேச நீதிப்பொறிமுறை நிறுவ' சோசலிஷ மற்றும் பச்சைக்கட்சிகள் செய்த முயற்சியைத் தோற்கடித்தது உண்மையே. ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இலங்கை சார்பான அறிக்கைகள் விடுத்துள்ளதும் உண்மை. ஆனால், தீர்மானத்தின் உள்ளடக்கத்தை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் சர்வதேசப் பொறிமுறையொற்றை நிறுவுதல் பற்றிய குறிப்பு ஏதும் இல்லையென்பதால் மட்டும் ஐரோப்பிய யூனியன் விடுத்த சவால்கள் எதிர்கொள்ளப்பட்டு விட்டன என்று பொருளல்ல.



தீர்மானத்தின் சில பந்திகள் இலங்கை அரசின் எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறானவை. உதாரணமாக, ஐரோப்பிய நாடாளுமன்றின் தீர்மானம் ஒரு ஆலோசனைக்குழுவை அமைத்தல் பற்றிய நிபுணர்குழுவின் முன்னெடுப்பை வரவேற்கிறது.

இத் தீர்மானம் நிபுணர் குழுவின் அறிக்கையை வரவேற்கிறது. அத்துடனமையாது ஐ.நா. அறிக்கை இலங்கை கவனத்திற்கெடுக்க வேண்டிய ஒன்று என்கிறது.

மேலும் தீர்மானத்தின் 8ஆம் பந்தி இலங்கையின் நீதிபரிபாலனம் பற்றி ஒரு குத்தலான குறிப்பைக் கொண்டுள்ளது. நீதிநிர்வாகம் சுதந்திரமாக இயங்காதது குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றம் கவலை அடைகிறது. ஆகவே ஐரோப்பிய நாடாளுமன்றின் பிரேரணை நல்லதொரு ஆரம்பமல்ல. ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையைப் பொறுத்தவரை ஐரோப்பிய நாடாளுமன்றின் நிலைப்பாடு மிகத்தெளிவாக உள்ளது. ஐரோப்பாவின் தனிநாடுகளின் மனப்பாங்கும் இதுவேயாகும்.

இரண்டாவதாக எஞ்சிய நாடுகளின் கொள்கை என்ன? 2009 மே இல் இலங்கை சார்பாக நின்ற கூட்டுச் சுருங்கிவிட்டதா? மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ள நிலையில், தெளிவான மதிப்பீடு செய்வது கடினம். இப்பொழுது (2009 இலும் கூட) உறுப்பினர்களாக உள்ள சீனாவும் கியூபாவும் இலங்கைக்கு முழு ஆதரவு தருவதில் வியப்பில்லை. பாகிஸ்தான் இஸ்லாமிய மாநாடுகள் அவையின் (oic) சார்பில் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கைக் கெதிராகக் காட்ட மானதோர் அறிக்கை விடுத்திருக்கிறது. நிபுணர்குழு அமைக்கப்பட்டதன்பின் அணிசேரா இயக்கத்தைச் சேர்ந்த எகிப்தின் எதிர்வினை என்ன எனக் கவனிக்கவேண்டும். ஆனால், எகிப்து இப்பொழுது மனித உரிமைகள் பேரவையில் அங்கத்தவரல்ல. அடுத்து ரஷ்யாவிடமிருந்தும் காட்டமான எதிர்வினையை எதிர்பார்க்கலாம். ரஷ்யா மனித உரிமைகள் பேரவை அங்கத்தவராயிருந்தபோதும், இதுவரை இலங்கை விவகாரத்தில் அமைதியாகவே இருந்து வந்துள்ளது.

இந்தியாவின் நிலைப்பாடு என்ன? 2009இல் விசேட அமர்வில் நடந்த விவாதத்தில் இந்தியா இலங்கையின் பக்கம் நின்றது. விசேட அமர்வு நிறைவடைந்த பின்பும், இலங்கை பற்றிய தீர்மானத்தில் மாற்றம் செய்யக் கூடாதென இந்தியா உறுதியாக நின்றது. ஆனால், இப்பொழுது இந்தியா மனித உரிமைகள் பேரவையில் உறுப்பு நாடல்ல. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா மௌனம் காப்பதற்குக் காரணம் இதுவா?

இலங்கை வெளிவிவகார அமைச்சரின் இந்திய விஜயத்தின் முடிவில் எடுக்கப்பட்ட இந்திய - இலங்கைக் கூட்டறிக்கை இந்தியாவின் நிலைப்பாட்டைக் கோடி காட்டுகிறது. அறிக்கையின் 5ஆம் பந்தி மீளக்குடியமர்த்தல், உண்மையான நல்லிணக்கம், இடம் பெயர்ந்தவர்கள் விரைவில் சொந்த இடங்களுக்குத் திரும்ப உதவுதல், அவசரகாலச்சட்டத்தை வாபஸ்பெறுதல், மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரித்தல், பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் இயல்பு நிலைக்கு மீளுதல், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மனிதாபிமான நிவாரணம் ஆகியவை பற்றி இலங்கை அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிறது.

இதுதான் இந்திய நிலைப்பாடு. இதன் பொருள் என்ன? நிபுணர் குழுவின் அறிக்கையைக் கண்டிக்கவும் இல்லை. வரவேற்கவும் இல்லை. இந்தியா சாத்தியப்பாடுகளைத் திறந்தே வைத்திருக்கிறது. ஆனால் இந்தியாவின் சொற்சிலம்பம் கவனத்திற்குரியது. மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரித்தல் என்கிறது. இறுதிக்கட்டங்களில் போர் நடத்தப்பட்டமுறை பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா தெளிவாக உள்ளதா?

"மனித உரிமை மீறல்கள்" மற்றும் "மனிதாபிமான சட்ட மீறல்கள்" இரண்டுக்குமிடையே இந்தியா வேறுபாடு காண்கிறதா? அல்லது போருக்குப்பின் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களைத்தான் இந்தியா குறிப்பிடுகிறதா?

இருக்கலாம். மேற்காணும் கேள்விகள் எழுப்பப்படும்போது ஆயுதமோதற் சூழலின்போது சர்வதேச மனித உரிமைச் சட்டம் பொருந்துமாதலின், மனித உரிமை மீறல் என்ற தொடர் ஆயுத மோதற்காலத்தில் சில சம்பவங்களையும் போருக்குப் பிந்திய குற்றச்சாட்டுக்களையும் உள்ளடக்கப் போதுமானது என இந்தியா வாதிடக்கூடும் (இதையே நிபுணர்குழு தன் 179 ஆம் 184ஆம் பந்திகளிற் சுட்டிக் காட்டியுள்ளது.)

ஒரு கேள்வி: "மனித உரிமை மீறல்கள்" பற்றிய குறிப்பு தமிழ்நாட்டைத் திருப்திப் படுத்தச் சேர்க்கப்பட்டதா? அல்லது இலங்கையைச் சாந்தப்படுத்த "மனிதாபிமானச் சட்ட மீறல்கள்" குறிப்பிடாது விடப்பட்டதா? எதுவாயினும் இந்தியா இரண்டையும் திறமையாகச் செய்வதாகவே தென்படுகிறது.

இருந்தபோதும்,அண்மைக்காலங்களில் வேறு பல நாடுகள் மேற்கொண்ட நிலைப்பாடுகள் இந்தியாவை விடத் தெளிவாகவே இருந்துள்ளன.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கைப் பிரச்சினையை மீளத்திறப்பது பற்றிய பரிந்துரை தொடர்பாக ஐரோப்பிய யூனியன் மேற்கு மண்டலம் மற்றும் ஏனைய நாடுகளின் நிலைப்பாடு உருவாகிறது. இலங்கைப்பிரச்சினை இன்னொரு விசேட அமர்வில் திரும்ப ஆராயப்பட நேர்ந்தால். மனித உரிமைகள் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதோரின் கருத்துக்கள் மனித உரிமைகள் ஆணையகத்தில் இலங்கையின் தலைவிதியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கப்போகின்றன.

பொறுப்புக்கூறல் மற்றும் அதன் தாக்கம் பற்றி இலங்கை கண்டுள்ள முன்னேற்றம் என்ன? மனித உரிமைகளைப் பேணுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுமிடத்து உலகில் மேற்கிலாயினும், ஏனைய திசைகளிலாயினும் ஆதரவுதரக்கூடிய பொறுப்புவாய்ந்த நாடுகள் இல்லாமலில்லை. இரு அணிகளையும் சேர்ந்த நாடுகளிற் பல, பொறுப்புக் கூறுதல் என்று வரும்போது முன்னுதாரணங்களாகக் கொள்ளத் தக்கவையல்ல.

என்றாலும், அதிக பொறுப்புவாய்ந்த தொரு நிலைப்பாட்டை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகையதொரு நிலைப்பாடு இலங்கை தன் ஆயுதப் படைகளுக்கெதிரான குற்றச்சாட்டுக்களைப் பாரதூரமாகக் கருதுகிறது என்ற மனப்பதிவை சில நாடுகளிடையே ஏற்படுத்தும். மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைப் பொறிமுறையில் ஓர் உண்மையான முன்னேற்றம் இருக்க வேண்டும். அதைவிட்டு, மனித உரிமைகள் ஆணைக்குழுவை மீள இயக்குதல் அல்லது வடக்குகிழக்குப் பகுதிகளிலிருந்து வரும் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஓர் அமைப்பை நிறுவுதல் பற்றிய அறிக்கைகள் அதிக பயன்தரா.


இதில் நாம் பற்றுறுதியோடிருக்கிறோம் என்பதை பத்திரிகையாளர் மகாநாடுகளில், கமராவின் முன், நெடுமூச்செறிவதால் காட்ட முடியாது. மாறாக, நிபுணர் குழுவின் அறிக்கைக் கெதிராக, விவேகமாக, நளினமாக, விரிவாக எதிர்வினையாற்ற வேண்டும்.

எதிர்வினையோ விசாரணையோ தேவையில்லை என வாதிடும் அரசியல்வாதிகளின் வெற்றுக் கூச்சலுக்கு மாறாக, தமக்கெதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு, படைத்தரப்பிலிருந்து வரும் அண்மைக் கால அறிக்கைகள் பெறுமதிமிக்கவையாய் உள்ளன.

தமக்கெதிராக வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வதில் தாம் முக்கிய பங்காற்ற வேண்டும் என்பதை ஆயுதப்படையினரும் மனங்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளில் அதிக நம்பிக்கை வைக்கக் கூடாது. அவர்கள் ஆயுதப்படைகளின் ரட்சகர்களாகத் தம்மை முன்னிறுத்தினாலும், அரசியல் ரீதியாக அவர்கள் உள்நாட்டில் பெறும் அனுகூலம் அதிகம்; ஆனால் ஆயுதப்படையினர் சர்வதேச மட்டத்தில் தாக்கப்படுகின்றனர்; பரிகசிக்கப்படுகின்றனர்.

**- கலான சேனரத்ன.**

# இந்துக் குருவின் துர்நடத்தை ஆஸியிலிருந்து நாடு கடத்தப்படுவாரா?



(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த முன்னாள் இந்து மதகுரு ஒருவர் ஒழுக்கமற்ற நடத்தையைக் கொண்டிருந்தார் என குற்றம் காணப்பட்டு அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

"பிரேமகாந்தன் இராஜரட்ன சர்மா என்பவர் அவுஸ்திரேலியாவின் கறும் டவுன்ஸ் என்னும் இடத்தில் அமைந்திருந்த ஸ்ரீ சிவா விஷ்ணு கோவிலின் குருவாக இருந்த சமயம் கடந்த 2004ஆம் ஆண்டு 23 வயதுடைய ஒரு பெண் இவரிடம் உதவி கோரிவந்தார்.

தனக்கு ஏதோ ஆபத்து நேரவுள்ளது என மனக்கிலேசமடைந்திருந்த இந்தப் பெண் கோவிலில் வணங்கிவிட்டு குருவின் ஆசீர்வாதத்தை பெறும் எண்ணத்தோடு வந்திருந்தார். கோவிலின் குரு இந்தப் பெண்ணை கோவில் வளவிலிருந்து தனது வீட்டுக்கு அழைத்துள்ளார் என பிராங்ஸ்ரான் நீதவான் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணின் சாதகத்தை பார்த்து பலன் கூறிய பூசகர் இந்த பெண்ணை வீட்டின் உட்பகுதிக்கு அழைத்துச்சென்று வீபூதி தடவி அவரை ஆசீர்வதிக்கத் தொடங்கினார். 2009 ஏப்ரலில் இன்னொரு பெண் இந்த கோவில் பூசகர தனக்கும் இவ்வாறு செய்ததாக முறையிட்டது பற்றியும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

"இவர் மீது இப்படியான குற்றங்கள் கூறப்பட்ட பின் அவர் தன் வேலையையும் வீட்டையும் இழந்துவிட்டார். இவருக்கு இப்போது அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இவருக்கு நிரந்தர வதிவிட அனுமதியும் கிடைத்துள்ளது. இப்போது இந்த சலுகைகள் மீளப்பெறப்பட்டு இவர் நாடு கடத்தப்படக்கூடும்" என இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கூறினார்.

# தனியார் ஓய்வூதியச் சட்ட மூலம் நடாளுமன்றில் நேற்றும் சர்ச்சை

(கொழும்பு)

தனியார் ஓய்வூதியச் சட்ட மூலத்தை வாபஸ் பெறுவதற்கு அமைச்சரவை தீர்மானித்த போதிலும், நாடாளுமன்ற ஒழுங் குப் பத்திரத்திலிருந்து அது நீக்கப் படவில்லை என எதிர்க் கட்சிகள் நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் சர்ச்சை கிளப்பின.

இச்சட்டமூலம் நாடாளுமன்றில விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்காக ஒழுங்குப் பத்திரத்தில் 14 ஆவது விடயமாக பட்டியல் படுத்தப்பட்டிருந்தது.

அதை ஒழுங்குப்பத்திரத்திலிருந்து ஏன் நீக்கவில்லை என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸா நாயக்க கேள்வி எழுப்பினார்.

அதன் பின் எதிர்க்கட்சி பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்கவும் இதே பிரச்சினையை கிளப்பி, அச்சட்ட மூலத்தை வாபஸ பெறுவதற்கு அமைச் சரவை தீர்மானமொன்றை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா இல்லையா எனக் கேட்டார்.

சபை முதல்வரான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இக்கேள்விகளுக்கு பதிலளிக் கையில், கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இது குறித்து ஆராய்ப்பட்ட பினனரே அச்சட்ட மூலத்தை ஒழுங்குப் பத்திரத்திலிருந்து நீக்க முடியும் என்றார்.

"சரியான நடைமுறைகளின் படி அதை செய்யவேண்டும். அதுதான் நாடாளுமன்ற சம்பிரதாயம். எதிர்க்கட்சியினருக்கு இது தெரியாமலிருப்பது குறித்து நாம் கவலையடைகிறோம்'' என அவர் கூறினார்.

# கோபுரத் திறப்புவிழாவில் அதிகாரிகளுக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

கொக்காவில் கோபுரத் திறப்பு விழாவில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்ட யாழ்.அரச அதிகாரிகள் கொக்காவில் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை கோபுர திறப்பு விழாவுக்குச் சென்ற யாழ். மாவட்ட அரசாங்க அதிகாரிகள் பலர் நிகழ்வில் கலந்துகொள்ளாது திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

தொலைத்தொடர்பு பரிவர்த்தனை கோபுர திறப்பு விழாவிற்கு இவர்கள் நேரம் தாமதமாகிச் சென்றிருந்தனர். இந்த நிலையில், பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி ஜனாதிபதியின் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு படைத்தரப்பினர் அனுமதிக்கவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி ஜனாதிபதி வருவதற்கு முன்னராக குறித்த நேரத்திற்கு வந்து உரிய இடத்திலுள்ள தமது இருக்கைகளில் அமருமாறு ஏற்கெனவே இவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் குறிப்பிட்ட சில அதிகாரிகள் நேரம் தாமதமாகிச் சென்றமையால் இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜேர்மனியில் தீ விபத்து இலங்கையர் ஒருவர் பலி

(கொழும்பு)

ஜேர்மனியின் லண்டவ் நகரில் இலங்கையர்கள் வசிக்கின்ற தொடர்மாடிக் கட்டடம் ஒன்றில் நேற்று அதிகாலை 4.00 மணியளவில் திடீரென பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இத்தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளதாக ஜேர்மனியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் ஏராளமானோரை மீட்புப் பணியாளர்கள் காப்பாற்றி உள்ளனர். தீ பரவிய மைக்கான காரணம் இன்னமும் கண்டறியப் படவில்லை. பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

# டோகாவில் கத்திக் குத்து; இந்தியர் ஒருவர் பலி

(கொழும்பு)

டோகாவில் பணிபுரிந்து வந்த இந்தியர் ஒருவரை அவருடன் பணிபுரிந்து வந்த இலங்கையர் ஒருவர் கடந்த 4 ஆம் திகதி கொலை செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த 24 வயதான என்ற இளைஞரே இவ்வாறு கொலை செய்யபபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி அரீப் தங்கியிருக்கும் இடத்துக்கு சென்ற குறித்த இலங்கையர் அரீப கதவை திறந்ததும் கொடூரமாக குத்திவிட்டு தப்பிசென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அரீப் கத்தியால் குத்தப்படுவதை நேரில் பார்த்த அவரது சகோதரர் ஹமீட், அரீப்பை வைத்தியசாலைக்கு தூக்கிச் சென்றபோதும் அவர் வைத்தியசாலைக்கு செல்லும் வழியில் உயிர நீத்துள்ளார்.

# ஆயுதக்கொள்வனவில் மோசடி; இப்போது ஒப்புக்கொள்கிறது அரசு

இராணுவம், கடற்படை, விமானப்படை, ஆகியனவற்றுக்கு ஆயுதங்களையும் வெடிப் பொருட்களையும் கொள்வனவு செய்வதில் முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாக திருமதி சிராணி திலகவர்தன தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு 2007 ஆம் ஆண்டு சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருந்தது என்பதை அரசாங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளது. எனினும் இது குறித்த மேலதிக விபரங்களை வெளியிட அரசாங்கம் மறுத்துவிட்டது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ குணவர்தன இதைத் தெரிவித்தார்.

மேற்படி ஆணைக்குழுவில் திருமதி திலகவர்தன, நிசங்க உடலகம, நிஹால் எட்வர்ட் திசா நாயக்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இந்த ஆணைக்குழு 28.01.2007 ஆம் திகதி தனது அறிக்கையை சமர்ப்பித்தது என அமைச்சர் கூறினார். எனினும் ஆணைக் குழுவின் பார்வையில் முறை கேடுகள் என கண்டறிப்பட்ட விடயங்கள் எவையென்பதை வெளியிட முடியாது. ஏனெனில் இவ்விவகாரம் தேசிய பாதுகாப்பு தொடர்பானது என அவர் கூறினார்.

அம்முறைகேடுகளில் சம்பந்தப்பட்ட நபர்களின் விபரங்களை வெளியிட முடியுமா என அஜித் பெரேரா எம்.பி. கேட்டபோது, மேற்குறிப்பிட்ட காரணத்தால் அதையும் வெளியிட முடியாது என அமைச்சர் பதிலளித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கும் அஜித பெரேரா எம்பிக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

### அரசியல் அமைப்பில்...

அண்மையில் இலங்கை இந்திய - இலங்கை கூட்டு ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளது. இது இந்தியாவுக்கு இலங்கை விட்டுக்கொடுத்துவிட்டது என்பதை தெளிவாக்குகிறது எனவும் அவர் கூறினார்.

இதன் அடிப்படையில் நிரூபமா மற்றும் சிவசங்கர் மேனன் ஆகியோர் பேச்சு நடத்துவர் என தெரிவிக்கப்படுகிறது. மேற்படி விபரங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றில் விளக்கமளித்தார்.

### அதிகாரப் பகிர்வு...

மற்றும், இந்திய மற்றும் இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையின் விடயங்கள் குறித்தும் அவர்கள் பேசவுள்ளனர்.

13 ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பால் அதிகாரப்பகிர்வு ஒன்று வழங்கப்படுவதாக, அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ் மற்றும் எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோர் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மாகாண மட்டத்திற்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதன் ஊடாக குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டமுடியும் என்று ஏற்கனவே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்ற உயர்மட்டச் சந்திப்புக்களில் ஒப்புதல் தெரிவிக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### அரசாங்க உயர்...

வருகை தரவில்லை. இவ்வாறு அரச அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளாமைக்குக் காரணம் கொக்காவில் கோபுரத் திறப்புவிழாவிற்கு ஜனாதிபதி வருவதால், அது பற்றிய ஒழுங்கமைப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுவிட்டார்களாம்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்தில் மக்களின் சேவைக்காக வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தை இவ் அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

இதனால் வலி.வடக்கில் மீள் குடியமரும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாதுள்ளது.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் வீதி திருத்துதல், மக்களின் பாவனைக்குரிய கிணறுகளை சுத்தப்படுத்தல், மின்சாரம் வழங்கல் என பல விடயங்கள் இருக்கின்றன. இது தொடர்பில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது தொடர்பில் அரச அதிகாரிகள் விளக்கமளிக்கவேண்டும். அப்போது தான் மேற்கொண்டு நடவடிக்கைகளை நாடாளுமன்ற உறுபபினர்கள் எடுக்கமுடியும். எனவே இவ்வாறு அரச அதிகாரிகளைத் தடுப்பது யார்? காரணம் என்னவெனத் தெரியவேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# வடக்கில் இன்னும் அகற்றவேண்டிய கண்ணிவெடிகள் 123000

(கொழும்பு)

யுத்தம் காரணமாக வடக்கில் புதைக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவத்தினால் மதிப்பிடப் பட்டுள்ள 16 இலட்சம் கண்ணி வெடிகளில் இதுவரை 3 இலட்சத்து 66 ஆயிரத்து 870 கண்ணி வெடிகள் மாத்திரமே அகற்றப் பட்டுள்ளதாக இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவின் பிரதம கள பொறியியலாளர் பிரிகேடியர் கே.எம்.யு.விஜேரட்ண தெரிவித்தார்.

வடக்கில் நடத்தப்பட்ட தொழில்நுட்ப அளவீடு ஒன்றின் அடிப்படையில் இன்னும் 400 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலிருந்து 12 இலட்சத்து 30 ஆயிரம் கண்ணி வெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை துரிதமாக மீளக்குடியமர்த்தவும் அந்த மக்களுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளவும் கண்ணிவெடி அகழ்வு மிக முக்கியமானதாகும்.

அந்த அடிப்படையில், மீள் குடியேற்றத்துக்கென இனங் காணப்பட்ட கிராமங்களில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு அரசாங்கமும் இராணுவத்தின் மனிதாபிமான கண்ணி வெடி அகற்றும் பிரிவும் முன்னுரிமை வழங்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.


# மருதங்கேணியில் தொடர்கிறது துரித மீள்குடியமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங் கேணி பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியமர்வு நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் துரிதகதியில் இடம் பெற்றுவருகிறது. வடமராட்சி கிழக்கு பாதுகாப்பு வலையத்தில் உள்ள சுண்டிக்குளம், நாகர்கோவில் பகுதியில் 732 குடும்பங்களைச் சேர்ந்த 3087 பேர் மட்டுமே இன்னும் மீளகுடி யேற்றப்பட வேண்டியுள்ளதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நேற்றுத் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில உள்ள 18 கிராம சேவையாளர் பிரிவில் ஏற்கனவே 14 கிராம சேவையாளர் பிரிவில் 2552 குடும்பங்களைச் சேர்ந்த 7622பேர மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். மிகவிரைவில் மேலும் ஒரு தொகுதி மக்கள் மேற்படி பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர். அதற்கான ஏற்பாடுகளை யாழ். செயலகம் தற்போது துரிதப்படுத்தியுள்ளது.

# நயினாதீவில் வருடாந்த உற்சவம்; அடிப்படைத் தேவைகளுக்கு ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை மேற்கொள்ளும் அவசர கூட்டமொன்று நேற்று யாழ். செயலகத்தில் யாழ். அரச அதிபர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தீவக கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் நயினை நாகபூசணி அம்மன் ஆலய நிர்வாகத்தினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் முதலானோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நயினாதீவில் தற்சமயம் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து பழுதடைந்திருப்பதன் காரணமாக புதிய பேருந்து ஒன்றை நயினாதீவில் சேவையில் ஈடுபடுத்த யாழ். அரச அதிபரினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் நயினாதீவுப் பகுதியின் வீதிகள் மோசமாக சேதமடைந்து காணப்படுவதன் காரணமாக அவ்வீதிகளையும் செப்பனிடுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு யாழ். அரச அதிபர் பணித்துள்ளார்.

அத்துடன் குறித்த ஆலயத் திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமுகமாக பெருமளவான பக்தர்கள் நாடு பூராவுமிருந்து வருகைதரவுள்ள நிலையில் எதிர்வரும் ஆடி மாதம் முதலாம் திகதியில் இருந்து 16 ஆம் திகதி வரை பக்தர்களுக்கான போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர் மற்றும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் மின்சார வசதி சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரது தொண்டர் சேவை என்பனவும் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பா)

# வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு மேலும் பத்து புதிய பேருந்துகள்



(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு புதிதாக மேலும் 10 பேருந்துகளை இலங்கை போக்குவரத்துச் சபை வழங்கியுள்ளது.

இந்தப் பேருந்துகள் காரைநகர், மன்னார், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய 5 சாலைகளுக்கும் தலா 2 பேருந்துகள் வீதம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட இந்தப் பேருந்துகளுக்கான பணத்தினை குறித்த சாலையிலுள்ள வருமானத்திலிருந்தே பகுதி பகுதியாக மீளச் செலுத்தவேண்டும்.

இநதப் பேருந்துகள் பெரும்பாலும் இந்த வாரத்திற்குள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதன்மூலம் சில புதிய வழித்தடங்களில் புதிய சேவையினை நடத்தமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# பேருந்துப் பயணத்தில் பறிபோனது தங்க நகைகள்

## சூத்திரதாரியை தேடி வலை விரிப்பு

(நெல்லியடி)

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பேருந்தில் பயணம் செய்த பெண் ஒருவரின் ஒரு தொகை நகைகள் திருடப்பட்டுள்ளதாக கனகராயன்குள பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி பேருந்தில் குறித்த பெண் பயணம் செய்த வேளை தனது நகைகளை கைப்பையில் வைத்திருந்தார். இவர் கனகராயன்குளப் பகுதியில், இறங்கிய வேளை தனது நகையைக் காணாது அதிர்ச்சியடைந்த நிலையில் கனகராயன்குள பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

கனகராயன்குளத்திற்கு சமீபமாக பெண்ணொருவர் பஸ்ஸிலிருந்து இறங்கியதாகவும், அவர் மீதே தனது சந்தேகம் உள்ளதாகவும் குறித்த பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

எனினும் பொலிஸார் அப்பகுதியில் தீவிர தேடுதல் நடத்திய போதிலும், சந்தேகத்திற்குரிய பெண்ணைக் கைதுசெய்ய முடியவில்லை.

இதேவேளை, கடந்த 4 நாட்களுக்கு முன்னரும் கிளிநொச்சியிலிருந்து வவுனியாவிற்கு சென்ற பேருந்தில் பயணம் செய்த பெண் ஆசிரியையின் ஒரு தொகைப் பணமும் களவாடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கனகராயன்குள பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (12)

# எம்.பி. பதவி பறிப்பு; வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)



தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமைக்கு எதிராக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, தான் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு வெளிநாடு செல்ல வேண்டியுள்ளதால் மனு மீதான விசாரணையை ஒத்திவைக்குமாறு அரச சட்டத்தரணி நீதிமன்றில் கேட்டுக் கொண்டார்.

குறித்த கோரிக்கைக்கு சரத் பொன்சேகா தரப்பு சட்டத்தரணியும் ஒப்புதல் அளித்தார்.

இதனையடுத்து மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூன் 29, 30 மற்றும் ஜூலை 4 ஆகிய திகதிகளில் நடத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்ததாக எமது நீதிமன்றச் செய்தியாளர் குறிப்பிட்டார்.

# புலிகளின் முக்கியஸ்தர் தமிழினிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான தமிழினி எனும் சுப்ரமணியம் சிவகாமியை ஜூலை 4 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்று உத்தரவிட்டார்.

தமிழினி, வவுனியாவில் கைதுசெய்யப்படும்போது, புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவராக செயற்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் தெரிவித்தனர். தமிழினியை மேலும் விளக்கமறியலில் வைத்து விசாரிப்பதற்கு அவர்கள் அனுமதி கோரினர்.

11.11.1993 ஆம் திகதி பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதலில் தமிழினி பங்குபற்றியதாகவும் 2003 ஆம் ஆண்டு மே மாதம், பெண்களுக்கான கூட்டங்களை நடத்துவதற்காக அவர் சுவிட்ஸர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளுக்குச் சென்றதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் அவர் அலுவலகமொன்றைக் கொண்டிருந்ததாகவும் அவருக்கு வாகனமொன்று வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்நிலையில் ஜூலை 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் உத்தரவிட்டார்.

# போலி மருத்துவர் கண்டி நகரில் கைது

(கொழும்பு)

தகுதியுடைய வைத்தியர் பட்டத்தை போலியாகப் பெற்று கண்டி நகரில் வைத்திய மத்திய நிலையமொன்றை நடத்திவந்த போலி வைத்தியர் ஒருவர் கண்டி குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி நகரில் பலவருட காலங்களாக குறித்த நபர் வைத்திய மத்திய நிலையத்தை நடத்தி வந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

குறித்த வைத்திய நிலையம் முற்றுகையிடப்பட்ட போது அங்கு போலியான வைத்தியப் பட்டம் பெற்ற புகைப்படம் தொங்கவிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட வைத்தியர் சுமார் 20 வருட காலங்களாக நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்ததோடு சிகிச்சை அளித்ததற்கான வைத்திய சான்றிதழையும் வழங்கி வந்துள்ளார்.

எனினும் இவர் இலங்கை வைத்தியர் சபையிலோ அல்லது தனியார் வைத்திய சபையிலோ பதிவு செய்யப்பட்டவர் அல்ல என தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர், குறித்த போலி வைத்தியர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில்கூட சித்தியடையவில்லை எனத் தெரியவந்துள்ளது.

குறித்த போலி வைத்தியர் பலருக்கு சிகிச்சை அளித்துள்ளதோடு சத்திரசிகிச்சையும் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சுற்றிவளைப்பின் போது வைத்திய உபகரணங்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வைத்தியருக்கு உதவியாகப் பணி புரிந்த இரு யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# காணாமல் போனவர்களை மீட்டுத் தாருங்கள் உறவினர்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்




(வவுனியா)

காணாமல் போயுள்ளவர்களைக் கண்டு பிடித்துத் தர வேண்டும் என்றும், விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுவதோடு அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரி உறவினர்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா பேருந்து நிலையத்தின் எதிரில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நாம் இலங்கையர் என்ற அமைப்பு அழைப்பு விடுத்திருந்தது.

யுத்த காலத்திலும் அதற்கு முன்னரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை என்றும், அவ்வாறு விடுதலை செய்யப்படாதவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட வேண்டும் என்பதுடன், அவர்களை விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோஷமிட்டு வலியுறுத்தினர்.

சிவசக்தி டிலானி என்ற 15 வயது சிறுமியும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வந்திருந்தார். தனது சகோதரன் சுற்றிவளைப்பு ஒன்றின்போது கொல்லப்பட்டதாகவும், தனது தந்தை கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போய்



4 வருடங்களாகி விட்டதாகவும், அவரைப் பற்றிய தகவல் எதுவும் தங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றும் அழுத வண்ணம் தெரிவித்தார்.

தாங்கள் எவருக்கும் எதுவும் செய்யாத போதிலும், தங்களுக்கு இந்தத் துயரம் நேர்ந்திருப்பதாகவும் பாடசாலை செல்ல வேண்டிய நேரத்தில் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு வரநேர்ந்திருப்பதாகவும் அந்தச் சிறுமி கூறினார்.

# கடல் அட்டை கடத்தல் கடற்படையிடம் மூவர் சிக்கினர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட ஒரு தொகுதி கடல் அட்டைகளை கைப்பற்றியுள்ள கற்பிட்டி கடற்படையினர் மூன்று பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கற்பிட்டி கடற்பரப்பை நோக்கி வந்துகொண்டிருந்த இயந்திரப் படகொன்றை சோதனையிட்ட கடற்படையினர் அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த கடலட்டைகளைக் கைப்பற்றியுள்ளனர். சுமார் 20 பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த கடலட் டைகளின் பெறுமதி 80 இலட்சம்ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகளையும், இயந்திரப்படகில் வந்த மூவரையும் கற்பிட்டி பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.